தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 ஆடவை 28 (12-7-83) விலை 65 காசுகள் இதழ் எண் : 21 — பகுதி-29.92

★ யாருக்கு வெறி பிடித்திருக்கிறது?

தமிழருக்கா? வடவருக்கா?

★ தமிழன் என்றுமே ஏமாளிதானா?

நேர்முகத் தேர்வுக்கு வருகவென நம் அன்பர் ஒருவருக்கு வாரணாசி சமற்கிருதப் பல்கலைக் கழகத்தார் விடுத்த இம்மடலைத் தமிழுள்ளங்கள் கண்ணுற விரும்பி அன்பர் இங்கு அனுப்பியுள்ளார். உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் இந்தி ஆளுமையை உணர்ந்து கொள்வார்களாக! முழுக்க இந்தியிலேயே இருப்பது கண்டு யாரை நொந்து கொள்வது? எந்தத் தமிழன் கொதித்து எழுகிறான்? ஐயகோ! தமிழின உணர்வு சூம்பி விட்டதா?

எது வெறி?

தம் உயர் நிலையிலிருந்து படிப்படியாக அழிக்கப்பட்ட நம் தமிழ்மொழியின் தகுதியை மீண்டும் உணர்ந்து படிப்படியாக நடைமுறைப் படுத்தவும் அதன் செம்மாந்த உயர் தனிச் சிறப்பு நிலையை உலகுக்கு உணர்த்தவும், உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழி (Primary & Original language of the world) தமிழ்தான் என்பதை நிலைநிறுத்தி - பிற மொழியியல் பொய்யுரைகளுக்குச் சாட்டையடி கொடுக்க முற்படும் நம்முயற்சி வெறித்தனமானது என்றால், வேற்று மொழியினரும் வேற்று இனத்தவரும் தம்பதவி ஆளுமையால் இவ்வாறு மொழி வெறியைச் செயற்படுத்த விரும்பும் சுயவாளித் தனத்தை என்னவென்று சொல்வது? எது வெறித் தனமானது? இழந்த உரிமையை அல்லது சிறப்பை மீண்டும் பெறுவது வெறித்தனமா? அல்லது பதவி ஆளுமையால் அனைத்து மொழிகளையும் முன்னுக்கு வரவிடாமல் தம்மொழியை நிலைநிறுத்துவது ஆளுமைச் செய்வது, திணிப்பது வெறித்தனமா? - மக்கள் சிந்திக்க வேண்டும்.

இந்தித்திணிப்பு இல்லையா?

நாளுக்கு நாள் இந்தித் திணிப்பு இல்லை இல்லை என்று ஏமாற்றுப் பேச்சு பேசிக் கொண்டிருக்கும் தலைமையமைச்சருக்கு இதுபோன்ற நிலைகள் தெரியாதனவா என்ன? படிப்படியாக நுழைக்கப்பட்டு வருகின்ற இந்தியின் வெளிப்படையான திணிப்பை இல்லை என்று கூறுபவர்களும், அதற்கெனப் பல்லிளிப்பவர்களும் தமிழரைத் தவிர வேறு எவரும் இந்நாட்டில் இல்லை! சூடு சொரணையற்ற வனாய்த் தமிழன் படிப்படியே மாற்ற முற்றுக்கொண்டு வருகின்றான்!

எதை எதிர்க்கப் போகின்றனர்?

என் உயிருள்ளவரை தமிழகத்தில் இந்திநுழையாது என்று புரட்சித் தலைவரும், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்று கலைஞரும் தொடர்ந்து கூறிக் கொண்டு, என்றைக்கு எதை எதிர்க்கக் காத்திருக்கின்றனர்? தமிழகத்தையும், தமிழையும் கட்டிக் காப்பதாகக் கூறும் இத்தலைவர்கள் ஏன் இவர்கள் தனி நிலை விருப்பு வெறுப்பிற்காக மாற்றான் உள் நுழைந்து சுரண்ட வழி விடுகின்றனர். ஏன் இந்த நிலைகளில் உண்மையான செயற் பாடுகளை மேற்கொள்ளவில்லை! ஏன் தயங்குகின்றனர்.

குடிக்கக் கூழில்லாத குப்பனும், சுப்பனும் இந்தி படித்தால் தான் பஞ்சம் தீரும் என்ற நிலை வந்தால் தான் - அந்நிலையும் வெளிப்படையாகத் தெரிந்தால்தான் பொதுவுடைமைப் போலிகளும் பொங்கி எழுவர் போலுள்ளது!

தமிழா உன் நிலைதான் என்ன? யாரை நோக்கிக் காத்திருக்கிறாய்?

"இப்பொழுதே எழாமல் நீ எப்பொழுதுதான் எழுவாய் எண்ணிப் பார்ப்பாய்!"

- பாவலரேறு.

O



தமிழன்பர் ஒருவருக்கு நேர்முகத் தேர்வுக்கென வந்த மடலின் உறை (முழுக்க இந்தியில் இருப்பதைக் காணுங்கள்)


सम्पूर्णानन्द संस्कृत विश्वविद्यालय, वाराणसी

संख्या- दिनांक-

ஒரு அன்பருக்கு வந்த நேர்முகத் தேர்வுக்கான மடல் (முழுக்க இந்தியில் இருக்கிறது)

பொறுத்தருள்க!

பொறி பழுதுற்றதாலும், பணியாளர்கள் சரியாக அமையாததாலும், பணி யழுத்தங்களினாலும் கடந்த நான்கு கிழமைகளாக தமிழ்நிலம் வர இயலாமல் காலங் கடந்து வருகிறது. அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம். இனி குறிப்பிட்ட காலங்களில் வர ஏற்பாடு செய்யப் பெறுகிறது.

- அமைச்சர்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

உ.த.மு.க. செய்திகள்:

உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு அவர்களின் தென்மாவட்டச் சுற்றுச் செலவு

குறும்பூர் (திருச்செந்தூர்) நிகழ்ச்சிகள் :

வண்டார்குழலி பூப்புநீராட்டுவிழா :

கடந்த 24-6-83 வெள்ளி காலை 10 மணியளவில் குறும்பூரில் (நெல்லை), உ.த.மு.க. வட்டச் செயலர் திரு. பூவரசு (எட்வர்டு மலர்வேந்தன்) திருவாட்டி எசுதர் அறமுடையாள அவர்களின் செல்வி வண்டார் குழலின் பூப்பு நீராட்டுவிழா, மிகச் சிறப்பாக நடைபெற்றது பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றுச் செல்வியை வாழ்த்தி அரியதொரு விளக்கவுரை யாற்றினுர்கள். திரு. பூவரசு வரவேற்புரையாற்றினுர். பெரும்புலவர் ச. சிவசங்கு (நெல்லை வடக்கு உ.த.மு.க. அமைப்பாளர்), நெல்லை நெடுமாறன் (தி மு.க.), எசு. பி. முத்து ஆகியோர் செல்வியை வாழ்த்தி நல்லுரை வழங்கினர். பகல் 12.30 மணியளவில் விழா இனிய விருந்துடன் இனிது நிறைவுற்றது.

அன்று பிற்பகல் 3.30 மணியளவில் பாவலரேறு அவர்களை, புலவர் சிவசங்கு அவர்களும், அருஞ்சுனை புதுக்குடியைச் சேர்ந்த, செந்தில் வட்ட உ. த.. மு. க. தலைவர். திரு. பெ. தி. செல்வநாயகம் அவர்களும் மிகச் சிறப்புள்ள அருஞ்சுனைக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள இயற்கையான தண்ணீர், வெந்நீர் ஊற்றுகளையும் அங்குள்ள இயற்கை எழில் தோய்ந்த காட்சிகளையும் காட்டினர். இவருடன் புலவர் திரு. க. அய்யாத்துரை க.மு. அவர்களும் திரு. த. அன்பழகன், அவர்களும் மணவழகன், முருகன் அவர்களும் உடன் சென்றனர்.

மாலை திரு. பெ. தி. செல்வநாயகம் அவர்கள் வீட்டில் இனிய பழங்களும் இனிப்புகளும் ஐயா அவர்களுக்கு வழங்கப்பெற்றன. அன்று பகல் ஐயா அவர்களும் அன்பர்களும் மருத்துவர் ச. சுப்பையா அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தனர். பாவலரேறு அவர்களை மறுநாள் நெல்லை வரை வந்து திரு. கலியாண சுந்தரம் வழியனுப்பி வைத்தார்.

உ.த.மு.க. கொள்கை விளக்கக் கூட்டம்

அன்று (24-6-83) இரவு 8 மணியளவில் குறும்பூர் கடைத்தெருத் திடலில் செந்தில் வட்ட உ.த.மு.க. தலைவர் திரு. பெ. தி. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் உ.த.மு.க. கொள்கை விளக்கக் கூட்டம் நடைபெற்றது. புலவர் திரு. ச. சிவசங்கு, புலவர் திரு. தமிழ்மாறன் திரு. பூவரசு அவர்களின் உரைகளுக்குப் பின் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் இரவு 1 மணிவரை கொள்கை விளக்கத்துடன் அரியதோர் உணர்வுரை யாற்றினுர். இரவு நீண்ட நேரம் ஆகியும் அச்சிற்றூர்ப் புற மக்கள் கலையாது ஐயா அவர்களின் அறிவு தோய்ந்த விளக்கவுரையைக் கேட்டதும், இவ்வுரை அவ் வட்டாரத்தில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக அவ்வூர்ப் பெருமக்கள் பேசிக் கொண்டதும குறிப்பிடத்தக்கன.

— நப் சிறப்புச் செய்தியாளர்

பாவலரேறு அவர்களின் திண்டுக்கல் வருகை!

25-6-83 காரிக்கிழமை பிற்பகல் 2-45 மணியளவில் பாவலரேறு அவர்கள் திண்டுக்கல் காமராசர் பேருந்து நிலையத்தை வந்தடைந்தார்கள். முற்போக்கு நண்பர்கள் சழகச் செயலர் ஆ. செல்லப்பாண்டியன், பொருளாளர் இரா. கழராம்பன். துணைச் செயலர் ந. அழகுபாண்டியன் ஆகிய மூவரும பாவலரேறு அய்யா அவர்களை வரவேற்று கோமத் தங்கும் விடுதிக்கு அழைத்துச் சென்றனர்.

முற்போக்கு நண்பர்கள் சிறப்புக் கூட்டம்:

25—6—83 மாலை 7 மணி அளவில் முற்போக்கு நண்பர்கள் கழகச் சிறப்புக்கூட்டம் கோமத் விடுதி உள்ள ரங்கில் தொடங்கியது. வழக்கறிஞர் கொ. சுப்பிரமணியன் க.இ., ச.இ, அவர்கள் தலைமையேற்றுப் பாவலரேறு அய்யா அவர்களின் தமிழினத்தொண்டின் சிறப்புகளையும், தொடர்ந்துவரும் அவரின் இனநலப்பணிகளையும் விரிவாக எடுத்துரைத்தார். ந.அழகு பாண்டியன் வரவேற்புரையாற்றினுர். 'தமிழின வீழ்ச்சியும் மீட்சியும்" எனுந்தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா. மணிமாறன் அவர்களும் துணைத் தலைவர் முற்போக்கு நண்பர்கள் கழகம மா. தினகரன் அவர்களும் உரையாற்றினர். மேலும், பாவலரேறு அய்யா அவர்களின் பாடல்களை மா. தினகரன் அவர்களின் செல்வன் செழியனும், செல்வி கலைமதியும் எழுச்சியுடன் பாடிக்காட்டினர். 8-15 மணியளவில் பாவலரேறு அய்யா அவர்கள் உரையாற்றத் தொடங்கினுர். அரங்கிலும், வெளியிலும் இதுவரை இல்லா அளவு நிரம்பி வழிந்த உணர்வாளர்களையே அய்யாவின் உரை அசையவிடாமல் இசைவோடு அமரச்செய்தது. அய்யாவின் உரை கேட்க, பார்ப்பனர்களும, பொதுவுடைமை இயகத்தைச் சார்ந்தோரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அய்யா அவர்கள் தமிழினம வீழ்ந்த வரலாறு, இன்றளவும் இன எதிரிகள் செய்துவரும் அழிசெயல்கள், மீள நாம் செய்ய வேண்டியவை என எல்லாவற்றையும் 3-45 மணிநேரம் எடுத்துரைத்தார்கள். 12 மணியளவில் பாவலரேறு அவர்களின் உரை நிறைவு பெற்றது. தொடர்ந்து இரா. கழராம்பன், பாவலரேறு அய்யா அவர்களின் கொள்கைகளை யொட்டி நாம் தமிழராக என்ன செய்ய வேண்டும் என அச்சியற்றி வழங்கவிருக்கும் துண்டறிக்கைச் செய்தியைப்படித்தார். முத்துபெரியசாமி அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் 12.10 மணியளவில் நிறைவுற்றது.

திண்டுக்கல் தமிழ்ச் சங்கச் சிறப்புக் கூட்டம்:

26—6—83 ஞாயிறு மாலை 4 மணியளவில் திண்டுக்கல் தமிழ்ச் சங்கப் பொதுப்பேரவைக்கூட்டம் நிகழ்வுற்றது. 'புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசனுர் விழா 5-30 மணியளவில் தொடங்கப்பெற்றது. திரு. சி.மா.பா. மாணிக்கம் அவர்கள் தலைமையேற்க, புலவர். திரு. இராமசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினுர். பாவரேறு அவர்கள் பாவேந்தருடன் தாம் பழகிய நினைவுகளையும், வாழ்க்கைச் சூழல்களையும் உணர்வோடு சொன்னுர். பாடல் சிறப்புகளைப் பல்லாற்ருனும், அய்யா அவர்களுக்கே உரித்தான தமிழுனும் உணர்வோடு பாடியும், இசை கூட்டியும் விளக்கிய போது மக்கள் எல்லோருடைய உணர்வையும் தொட்டது. எல்லோரும் மகிழ்ந்தும், பாராட்டியும், இடையிடையே மெய்ம்மறந்து ஒலியெழுப்பியும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர். இரவு 8.10 மணியளவில் புலவர் திரு. து. முருகையா, நன்றிகூற விழா நிறைவுற்றது.

பாவேந்தர் குடியிருப்பு திறப்புவிழா மேட்டுர்பட்டி:

26—6—83 இரவு 9 மணியளவில் பழந்தமிழர் (ஆதி திராவிடர்) குடியிருப்புக்குப் பாவலரேறு அவர்கள் பெயர் சூட்டினுர். பாவேந்தர் குடியிருப்புத் தமிழர் அய்யா அவர்களை அன்போடும் மகிழ்வோடும் வரவேற்றுச் சருக்கரைப் பொங்கல் வழங்கித் தாங்களும் உடன் உண்டு, அய்யா அவர்களின் மாந்த நேய அன்பை வலியுறுத்தும் அன்புரை கேட்டு மனம் நெகிழ்ந்தனர். அய்யா அவர்கள், மாணவ, மாணவியர்க்கு நூல்களும், கற்பலகையும், வாங்கி வழங்குவதற்கென, உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பாக உருபா 100/- வழங்கினுர்கள். இந்நிகழ்ச்சி முடித்துவிட்டு, மேட்டுப்பட்டியில் நகரவை உயர்நிலைப் பள்ளி முன் உள்ள திடலுக்கு 'பண்டார வன்னியன் திடல்' என்ற பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார்.

பின்னர் திண்டுக்கல் மேட்டுப்பட்டி தமிழின இளைஞர் மன்றங்களின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "தமிழின ஒற்றுமை எழுச்சி விழா"வில் பாவலரேறு அவர்கள் பங்கேற்ருர்கள். விழாவிற்கு, இரா. கழராம்பன் தலைமையேற்க, டேவிட்ராசா அவர்கள் முன்னிலையேற்க, சா. தமிழன்பன் வரவேற்புரை யாற்றினுர்.

(சான்போசுகோ — தென்மொழி, தமிழ்நில விற்பனையாளர்) இரா. நாராயணன், தி.க நரகச் செயலர், செல்லப் பாண்டியன், புலவர். இராமசாமி, கயிலை வீ. அரசெழில், நல்லை, ந. அழகுபாண்டியன் ஆகியோரின் உரைக்குப்பின், அய்யா அவர்கள் தமிழினத்தின் நிலையை விளக்கி, ஒற்றுமை ஒன்றுதான் அழிவிலிருந்து மீள வழி என எடுத்துரைத்தார். ஒற்றுமையாக வாழ வழிகாட்டு நெறிகளையும் எலலோரும் ஏற்றுக்கொள்ளும்படியும், பாராட்டும்படியும், எடுத்துரைத்தார். 'பாவேந்தர் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் ஆண்களும் பெண்களுப், சிறுர்களுமாய் உணர்வொடு கலந்து கொண்டது கூட்ட எழுச்சிக்குச் சிறப்புக் கூட்டியது. இரவு 12-30 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.

திண்டுக்கல் நகரச் செய்திகள் — பிற :—

1 25 6-83 காரி பிற்பகல் கோமத் தங்கும் விடுதியில், பாவலரேறு அய்யா அவர்களைப், தென்மொழி யன்பர்களும், தி.க., தி.மு.க. செயல் மறவர்களும் சந்தித்து உரையாடினர்.

2 26-6-83 ஞாயிறு, நண்பகல் உணவு திரு. கழராம்பன் - திருவாட்டி இளவேனில் ஆகியோர் இல்லத்தில் உண்டு ஓய்வெடுத்தார் :

3 திண்டுக்கல்லில் எல்லா நிகழ்ச்சிகளிலும், இரா. கழராம்பன், த. இளவேனில், நல்லை, ந. அழகுபாண்டியன், நல் -இளஞ்செழியன், கல்லை. அருட்செல்வன், கயிலை வீ. அரசெழில், செல்லப்பாண்டியன், மருத்துவா ப.வி ர. கண்ணன், வையைநம்பி, திருமலை, வேலவன் ஆகியோர் பாவலரேறுவுடன் பங்கேற்றனர்.

4 மருத்துவர் ப.வி.ர. கண்ணன் 27-6-83 திங்கள் காலைச்சிற்றுண்டி வழங்கி, பாவலரேறு அவர்களுடன், இரா. கழராம்பன், த. இளவேனில், நல். இளஞ்செழியன், கல்லை. அருட்செல்வன், சா. சான்போசுகோ. க.வே. பாலசுப்ரமணியன், திருமலை வேலவன், நல்லை. ந. அழகுபாண்டியன் ஆகியோரை பழனி நிகழ்ச்சியில் பங்கேற்க நண்பகல் 12 00 மணியளவில் வழியனுபபிவைத்தார்.

பழனி நிகழ்ச்சிகள் 1- — அமரர் பூண்டி : 1. 27-6-83

மாலை 5.00 மணியளவில் பழனிக்கு அருகாமையிலுள்ள அமரர்பூண்டியில், உ.த.மு.க. கொடியினைப பாவலரேறு அவர்கள் எழுச்சி முழககங்களிடையே ஏற்றிவைததார். உ.த.மு.க. அறிமுகக்கூட்டத்தில், இராமு, தி.க., இரா. கழராம்பன, த. இளவேனில் மணிமுத்து (உ.த.மு.க. மதுரை வடக்கு மாவட்டச் செயலா), நல்லை. ந அழகுபாண்டியன் ஆகியோர் உரைக்குடபின் பாவலரேறு அவர்கள் எழுச்சிமிகு உரையாற்றினுர்கள்.

பழனி உ.த.மு.க. சிறப்புக் கூட்டம் :

2 பின்னர் இரவு 8-00 மணியளவில், பழனி, உ.த.மு.க. சிறப்புக் கூட்டம், பழனி பாண்டிய வேளாளர் மடத்தில் தொடங்கியது. பட்டிமன்றம் நடைபெற்றது. பாவலரேறு அவர்கள் 9-30 மணியளவில் தன் இன மீட்சிக்கு வழிகாட்டும் உரையைத் தொடங்கிப், பல ஆழமான செய்திகளை எடுத்து வைத்தார். அய்யா அவர்களின் அறிவியல் அணுகு முறையோடு கூடிய தமிழ் மொழியின் சிறப்பு, வளம் ஆகியவை பற்றிய ஆய்வுரையை (3.30 மணிநேரம்) இரவு ஒரு மணி வரை ஆர்வத்தோடும், அமைதியோடும் மக்கள் இருந்து கேட்டனா.

திண்டுக்கல்லிலிருந்து உடன் வந்த அன்பர்களுடன், மா. தினகரன் அவர்களும், அவர்தம் அன்னையார் அவர்களும் கலந்து கொண்டனர்.

ஒட்டன் சத்திரம் நிகழ்ச்சிகள் :-

1 28-6-83 மாலை 5-30 மணியளவில் பாவலரேறுவுடன் அன்பர்கள் புறப்பட்டு ஒட்டன் சத்திரம் 6-00 மணியளவில் வந்தனர். உ.த.மு.க அறிமுக விழாவும், "ஏணி" இதழ் வெளியீட்டு விழாவும் நிகழ்வுற்றது. பட்டிமன்றம் நடைபெற்றது அய்யா அவர்கள், 10 மணியளவில் தொடங்கி 12-30 மணி வரை "உலகத் தமிழின முன்னேற்றக்கழகம்" தொடங்கப்பட வேண்டியதன் இன்றியமையாமை விளக்கி அஃது எவ்வகையில் தமிழினத்திற்குத் தொண்டாற்றும என்பதை விளக்கினுர்.

ஒட்டன் சத்திரம் நிகழ்ச்சிகளில் பாவலரேறு அவர்களுடன், தென்மொழி, நா. இளமாறன் அவர்களும் பங்கேற்ருர்.

வழியனுப்புதல் :-

29-6-83 காலை 7 00 மணியளவில், திண்டுக்கல் தொடர்வண்டிச் சந்திப்பில் வைகை விரைவுத் தொடர் வண்டியில், பாவலரேறு அவர்களை, தென்மொழி. நா. இளமாறன், இரா. கழராம்பன் த. இளவேனில்; நல்லை. ந அழகுபாண்டியன், நல். இளஞ்செழியன், கல்லை. அருட்செலவன், சா. தமிழன்பன் (சான்போசுகோ), கயிலை வீ. அரசெழில். க.வே பாலசுப்பிரமணியன், மா. தினகரன், ஆ. செல்லப்பாண்டியன், ம. தங்கவேல், மருத்துவா கண்ணன் ஆகியோர் அன்போடு வழியனுப்பி வைத்தனர்.

சிறப்புக்குறிப்பு :-

1. மேலே கண்ட எல்லாத் தொடர்கூட்டங்களிலும், தந்தை பெரியார் அவர்கள்தாம், மக்கள் மீது உண்மையான அன்பு கொண்டு, தமிழினத்துக்காகப் பாடுபட்ட ஒரே தலைவர் என்பதை நடுவாக வைத்து பாவலரேறு அவர்களின் உரை அமைந்திருந்தது.

2 முற்போக்கு நண்பர்கள் கழகக் கூட்டத்திலும், மேட்டுப்பட்டி தமிழின ஒற்றுமை எழுச்சி விழாவிலும் பெரியார் நூலக வாசகர் வட்டத் தலைவர். மயிலை கிருட்டிணன் அவர்கள் பங்கேற்றதுடன் விடுதியிலும் அய்யாவுடன் அளவளாவிச் சென்ருர்.

'தமிழ்நிலம்' — சிறப்புச் செய்தியாளர் :—

இரா, கழராம்பன், திண்டுக்கல்.

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி1) 12-7-83 இதழ் எண் : 21 (பகுதி-29.82

தமிழக அரசு இலங்கை அரசுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்புக!

இலங்கையில், 1956, 58, 61, 74, 79, 81- ஆகிய ஆண்டுகளில் நடந்த கொடுமையான தமிழின அழிப்புகளைத் தொடர்ந்து இந்த ஆண்டும், அரசியல் படுகொலைகள் மட்டுமீறித் தலை தூக்கியிருக்கின்றன. இத்தனை ஆண்டுகள் நடந்த கொடுமைகளுக்கும் இப்பொழுது நடக்கின்ற படுகொலைகளுக்கும் அடிப்படையில் ஒரு வேற்றுமை உண்டு.

கடந்த ஆண்டுகளில் தமிழர்களையும் அவர்களின் குடியிருப்புகளையும் சிங்கள வெறியர்களும், காவல்துறை, படைத்துறைகளைச் சேர்ந்த கொடியவர்கள் சிலரும் தங்கள் விருப்பப்படி அழித்தார்கள்; தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஆனால் இப்பொழுது நடக்கின்ற அழிப்புகள், கொலைகள், கொளுத்துதல் முதலிய நிகழ்ச்சிகளை அரசே திட்டமிட்டுச் செய்து வருகிறது.

இலங்கையில் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலையும், அதைத் தொடர்ந்து போடப்பட்ட இனவெழுச்சி ஒடுக்கல் முறைச் சட்டங்களும் அங்குள்ள காவல்துறையினரையும் ஊர்காவல் படையினரையும், முப்படை வீரர்களையும் வெறிகொள்ளச் செய்து கிளர்ச்சியுறச் செய்திருக்கின்றன என்றால் அதில் உண்மையில்லாமல் இல்லை. ஏற்கனவே தமிழர்களிடம் வெறுப்புணர்வையும் காழ்ப்புணர்ச்சியையும் கொண்டுள்ள சிங்களவர்க்கும் அவர்களைச் சார்ந்த படைத்துறையினர்க்கும் சிங்கள செயவர்த்தனே அரசு நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள யாரையும் சுடலாம்; கொள்ளலாம்; புதைக்கலாம்; இதற்கு வழக்குமில்லை, தீர்ப்புமில்லை என்னும் அடக்குமுறைச் சட்டங்கள் எரிகின்ற கொள்ளியில் எண்ணெய் வார்த்துள்ளது போன்று அழிப்பு உணர்ச்சிகளைத் தூண்டி விட்டுள்ளன.

நாள்தோறும் அங்குள்ள கிழக்கு வடக்கு மாவட்டங்களில் உள்ள தமிழர்கள் படைத்துறையினராலும் சிங்களவர்களாலும் எவ்வகைத் தங்குதடையின்றிப் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள் என்னும் செய்திகள் நம் நெஞ்சை உருக்குவதாயுள்ளன. இளைஞர்கள் ஈவு இரக்கமின்றி அழிக்கப்படுகிறார்கள்; பெண்டிர்கள் கொடுமையாகக் கற்பழித்துக் கொல்லப்படுகிறார்கள். தமிழர் குடியிருப்புகள் தீவைத்துக் கொளுத்தப்படுகின்றன. இவை நாள்தோறும் நடக்கின்றன.

இந்நிலையில் அங்குள்ள தமிழர்கள் தங்கள் உயிருக்கு ஒரு வகைப் பாதுகாப்பும் இன்றி அன்றாடம் தம் உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு வாழும் அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இக்கொடுமைகளைக் கேட்கவும் தடுத்து நிறுத்தவும் இதுவரையில், தமிழக அரசோ இந்திய அரசோ எந்த வகையான ஒரு சிறு முயற்சியும் எடுக்கவில்லை. வாயளவில் கூட ஒரு கண்டனம் தெரிவிக்கவில்லை. இந்நிலை அவ்வரசுக்கு மிக ஆக்கமாகவும் ஊக்கமாகவும் அமைந்துவிட்டது. மாறாக இங்குச் சிறைப்படுத்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் மேல் எடுக்கப்பட்டுள்ள வழக்கு மன்ற நடவடிக்கைகளும், அவர்களைச் சிங்கள அரசிடம் ஒப்படைப்பதற்குத் தில்லியரசு எண்ணி வருவதாகக் கூறப்படும் செய்திகளும் வேறு, செய்வர்த்தனே அரசு செய்யும் இவ்வினப் படுகொலைகளுக்குத் தூண்டுகோள்களாய் அமைந்துள்ளன.

எனவே, தமிழக அரசு, தமிழர்களின் உண்மையான அரசாக இருக்குமானால், உடனே சட்ட மன்ற, பாராளுமன்ற, உறுப்பினர்கள், கட்சி வேறுபாடற்ற அறிஞர்கள், தலைவர்கள் ஐம்பது பேரைக் கொண்ட தூதுக்குழுவைச் செயவர்த்தனே விடம் இப்படுகொலைகளுக்குக் கடுமையான கண்டனத்தையும், தடுப்பு முயற்சிகளையும் செய்யுமாறு, அனுப்பி வைக்க வேண்டும். இதை உடனடியாகச் சிறிதும் காலந்தாழ்த்தாமல் செய்ய வேண்டும். தில்லியின் பரிந்துரைக்குக் காத்திராமல், தமிழக அரசும் முதலமைச்சர் இராமச்சந்திரனும் நேரடி அக்கறை கொண்டு இத் தூதுக்குழுவை அனுப்ப முன் வருவார்களா? முதலமைச்சர் அவரின் தமிழினப் பற்றை இக்கால் உறுதிப் படுத்திக் கொள்ளுவார் என்று நம்புகிறோம்; எதிர் பார்க்கிறோம்.

பார்ப்பனர் தமிழுக்குப் பகைவரே!

தமிழை அவர்கள் விரும்புவதே இல்லை!

இதோ இன்னொரு சான்று!

(அண்மையில் நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற ஆரியப்பார்ப்பனர் வீட்டுத் திருமண அழைப்பிதழ் ஒன்று இங்கு வெளியிடப் பெறுகிறது. இதில் தமிழுண்டா? தமிழ் உணர்வுண்டா? பார்ப்பனர் தங்களைத் தமிழர்கள் என்று கூறிக் கொள்வதை எந்த வகையில் ஏற்றுக் கொள்ள முடியும்?)

ஸ்ரீ பொலிந்து நின்றபிரான் நம்மாழ்வார்
திருவடிகளே சரணம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீ வரதகுரவே நம:

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனச்சார்யோபய வேதாந்தாசாரியராய் சமதமாத்யனந்த கல்யாண குணகண பரிபூர்ணராய் அஸ்மதஸாதாரண ஸ்வாமியாய் அஸ்மத் ப்ராப்யப்ராபக பூதராய் அஸ்மத் ஸகலவித பந்துவாய் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமான் ... ... ஸ்வாமி தேனே மலரும் திருவடித் தாமரைகளில் அடியேன் தாஸாநு தாஸன் சரமாவதி தாஸன் ஆழ்வார் திருநகரி வாத்யார் ஆ. திருவேங்கடதாஸன் தாளும் தடக்கையும் கூப்பி அனந்தமான தண்டன் சமர்ப்பித்துச் செய்யும் விண்ணப்பம். இவ்விடம் தாஸவர்க்கம் க்ஷேமம். அவ்விடம் தேவரீருடைய நித்ய ததீயாராதனோபய வேதாந்த க்ரந்தகால க்ஷேபாதிசயங்கட்க்கு பதேபதே ஸ்ரீமுகம் க்ருபை செய்ய ப்ரார்த்திக்கிறேன்.

இப்பவும் நாளது ருதிரோத்காரிஞூ வைகாசிமீ 4வ (18—5—83) புதன்கிழமை சுக்ல ஷஷ்டியும் புஷ்ய நக்ஷத்ரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தன்று காலை மணி 9—க்கு மேல் 10 மணிக்குள் மிதுன லக்னத்தில்

அடியேனுடைய பௌத்திரனும், சிரஞ்சீவி
ர. ரெங்கனுடைய ஜேஸ்ட குமாரனுமான
சிரஞ்சீவி R. திருவேங்கடத்தானுக்கு ப்ரஹ்மோபதேச
முஹூர்த்தமும்

ஷ தினம் காலை மணி 10க்குமேல் 11—க்குள் கடகலக்னத்தில்
அடியேனுடைய பௌத்திரியும்,
சிரஞ்சீவி T. ரெங்கனுடைய
ஜேஸ்ட குமாரத்தியுமான சௌபாக்கியவதி
பூமா என்ற நாச்சியாரை
திருநாங்கூர் திருத்தேவனார் தொகை
(கீழ்ச்சாலை) ஸ்ரீ உ.வே S. அண்ணாத்துரை
அய்யங்கார் கனிஷ்ட குமாரன் சிரஞ்சீவி
A, சடகோபன், M.E.,A.M.I.E. க்கு
Asst. Executive Engineer NLC Ltd.,

கன்னிகாதானம் செய்து கொடுப்பதாய் ஸ்ரீ பொலிந்து நின்ற பிரான் நம்மாழ்வார் க்ருபையை முன்னிட்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு ஷ சுப முஹூர்த்தங்கள் ஆழ்வார் திருநகரி, நிர். 39, வடக்கு ரத வீதியிலிருக்கும் அடியேனுடைய க்ருஹத்தில் நடக்கிறபடியால் தேவரீர் குடும்ப சமேதராய் முதல் நாள் நடக்க இருக்கும். ததீயாராதனத்துக்கும், முஹூர்த்தங்களுக்கும் க்ருபையாக எழுந்தருளி வடுவையும் வதூவரர்களையும் ஆசீர்வதித்து முஹூர்த்தங்களை நடத்திக்கொடுத்து அடியோங்களையும் அநுக்ரஹிக்க வேணுமாய் தலை வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.
அவ்வண்ணம் அடியேனும் பிரார்த்திக்கிறேன்.

தாஸன் வேணும் அனந்தமான தண்டன்

சமர்ப்பித்த விண்ணப்பம் வாசிகதோஷ :க்ஷந்தவ்ய
S. அண்ணாத்துரை அய்யங்கார், கீழச்சாலை
வாத்யார் ஆ. **திருவேங்கடதாஸன்**



பாவலரேறுவின் 4-ஆவது அயலகச் செலவு!

செப்டம்பரில் இங்கிலாந்து, பிரான்சு செல்கிறார்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வரும் செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் இங்கிலாந்தில் நடைபெறும் திரு.வி.க. நூற்றாண்டு விழாவிலும், பிரான்சில் நடைபெறும் உ.த.மு.க. தொடக்கவிழாவிலும், பெரியார் பெருவிழாவிலும் கலந்து கொள்ளவிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

'சாதிமூலம்' 'இந்தி'க்கு ஆதரவா?

பெரியார் திடலில் கூடிய யாதவர் மாநாட்டில் நடந்ததென்ன?

பாவலரேறு ஐயா,

இந்து மதத்தின் கண்டுபிடிப்புகளில் ஒன்றான 'சாதி' அமைப்பு தமிழினத்தை கடைத்தேற விடாத அளவு செய்துவிட்டது. பெரியார் செய்த புரட்சியால் ஆரியத்தின் ஆணிவேரே ஆட்டம் கண்டுவிட்டதென நம்பினோம்; ஆனால் கடந்த சில ஆண்டுகளாகப் பெருகி வரும் சாதிச் சங்கங்களும், அவர்களின் ஊர்வலம், மாநாடு, கோரிக்கைகள் போன்றவையும் பழைய படி சாதி வேற்றுமைகளை அதிகப்படுத்துவதோடு, 'வருணாசிரம காவலர்க்குத் தெம்பையும் துணிவையும் கொடுத்து வருகின்றன.

யாதவர் மாநாட்டில் இந்தி:

பெரியார் திடலில் அண்மையில் கூடிய 'யாதவர் மாநாடு' நிகழ்ச்சிகள் அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. யாதவ மகா சபைத் தலைவரான 'சியாம்லால் யாதவ்' என்பார், 'தமிழ் நாட்டு யாதவர் எல்லாம் இந்தி பயில வேண்டு'மென்று கேட்டுக் கொண்டார். வானொலியும் (சென்னை) அதைச் செய்தியறிக்கையில் வெளியிட்டு மகிழ்ந்தது. ஆனால் தமிழ்நாட்டு யாதவர் யாரும் அதனை எதிர்த்ததாகத் தெரியவில்லை.

ஆக, இந்த வடக்கத்தியர் எந்த ஒரு வழியிலாவது இந்தியைப் பரப்பத் துடிப்பதுதானே இதன் மூலம் வெளியாகிறது? அரசியல் மதம் வழி பரப்பவியலாத இந்தி சாதி வழியே வரப் போகிறதோ?

யாதவர் ஆரியரா?

இதைவிட அதிர்ச்சிதரும் செய்தி ஒன்று, தமிழ்நாட்டுச் சாதியினர் சிலரும் தங்களை யாதவா என்று வெளி (பிரகடன)ப் படுத்தியுள்ளதுதான்! இடையர், கோனார் போன்றோர் தங்கள் மீது சுமத்தப்பட்ட சாதி இழிவைப் போக்க 'யாதவா' என்ற வடநாட்டுச் சாதியோடு தம்மையும் இணைத்துக் காட்டுவதாகவே தெரிகிறது.

அதுவன்றி, ஒரே தொழில் புரிவதாலேயே, உலகில் எங்கு வாழ்ந்தாலும் ஒரே இனம்—சாதி ஆகிவிடுவரா? அப்படியானால் இவர்களின் தொழிலைப் பார்க்கும் அமெரிக்கர், ஆப்பிரிக்கர் எல்லாம் யாதவராவரா? இஃது அறிவுக்கென்ன — அறிவியலுக்கே ஒத்துவராத ஒன்றாயிற்றே!

மேலும், 'யாதவர்' என்பார் வடக்கே உள்ள ஓர் 'ஆரிய' இனம். ஆயின், இங்குள்ள யாதவா ஆரியரா, திரவிடரா? இருவரும் ஒரே இனமானால் தானே ஒரே சாதியாகும். இப்படியே இங்குள்ள 'செட்டியார்' எல்லாம் 'வைசியர் — பனியா' என்றும், நகைத் தொழிலாளர் (பொற்கொல்லர்) 'விசுவகர்மா' என்றும் கூறிவருகின்றனர் ஆயின், நம்மில் பாதிபேரும் ஆரிய இனமாகுமே!

நாம் இந்தப் பார்ப்பனரைத் தாம் ஆரியரென்று அடையாளம் காட்டுகின்றோம். ஆனால் மற்றவர்களும் சாதிவெறியால் துடிப்பதன் கிடக்கை என்ன? அறிவுள்ளோர் சிந்திப்பார்களா?

அன்பன்,
செ. நடராசன்.

கருணாநிதிநகர்,
24-6-83.

தமிழர் முன்னேற்றத்திற்கு பல்வேறு இயக்கங்கள் தேவையா?

உலகில் முதன் முதலில் தோன்றியதும் முதன் தாய் மொழியைப் பேசியதும் மாந்தப் பண்பாட்டின் மேன்மையில் நின்றதுமான தமிழினம் இன்று எல்லா நாடுகளிலும் எல்லா நிலைகளிலும் இழிந்து வருவது மிக மிக இரங்கத் தக்க தொன்றாகும். பல வழிகளிலும் அழிந்து மொழி வழியில் மட்டும் அழியாது இருக்கும் இந்தத் தமிழினத்தைக் கடைத்தேற்றிக் கரை சேர்க்கும் கலங்களாக இங்கும் அங்கும் இன்றும் தோற்றும் எத்துணையோ இயக்கங்கள் தோன்றுகின்றன. அவை எல்லாம் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கம் வரை சிதைந்தும் பின் மாறியும் இந்தத் தமிழினத்தைக் காப்பதற்குப் பகரமாக இவ்வினத்தை அழித்து வரும் வேற்றினப் பகைக்கு எருவாகவும் இரையாகவும் அமைகின்றதைத் தான் நாம் காண்கின்றோம். எனவே அழிந்து வரும் இந்தத் தமிழின முன்னேற்றத்திற்குப் பல்வேறு இயக்கங்கள் தேவையா என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அன்றிலிருந்து இன்று வரை ஒற்றுமையின்மையும் தலைமையைப் போற்றாத பண்பும் தமிழரிடம் இருந்து வருகின்றது. அதனாற்றான் நாடே இல்லாத நாடோடிகளும் வந்தேறிகளும் வளமாக வாழ்வதற்கு இடந் தந்து விட்டு தன் இல்லில் குடியேற்றிவிட்டுத் தாங்கள் பலபிரிவினராகிச் சண்டையிட்டுச் சாகின்றனர்.

ஒரு இயக்கம் தோன்றுமானால் எந்த எந்த வழிகளில் அவ்வியக்கத்திற்குத் துணை நிற்கலாம் எவ்வெவ்வாறு அதனைத் தாங்கி வினையாற்றலாம் என்பதில்லாமல் இன்னான் அமைத்தது: அதற்கு எப்படி நாம் துணை செல்வது? அதன் வளர்ச்சி அவனுக்கன்றோ புகழ் ஈட்டும்! இதற்கு நாம் துணை செய்யலாமா? என்று அலசி ஆய்ந்து அதைத் தகர்த்தெறிவதிலோ அன்றி அதனின்று பிரிந்து வேறோர் இயக்கம் அமைத்து தான் புகழ் பெற வேண்டுமென்பதிலோ தான் தமிழர்கள் விருப்பங் கொள்கின்றனர். அமைக்கப்படும் இயக்கம் செயலாற்ற வில்லையானால் அல்லது தலைமைப் பொறுப்பின் மடியாலோ வேறு பல வினையாலோ செயலற்றிருந்தால் பொறுப்புக்களை மாற்றிச் செயல்பட வைக்கலாம் அல்லது அவர் அதற்கு இசைவில்லை எனின் பிரிந்து போய் ஒரு வலுவுள்ள இயக்கத்தை அமைக்கலாம். ஆனால் அப்படியில்லாது பொறாமையாலும் பொச்சாப்பாலும் அழுக்காற்றாலும் புகழ்க் காய்ச்சலாலும் பிரிந்து பிரிந்து பல்வேறு இயக்கங்கள் அமைத்தால் நம் நோக்கங்கள் சிதறிச் சிதையுமேயன்றி அது ஒரு நாளும் கிளைத்துச்செழிக்கா.

தமிழினத்தை முன்னேற்றுவதற்கு தமிழகத்தில் எத்துணை கழகங்கள் தோன்றின? இன்னும் தோன்றிக் கொண்டிருக்கின்றனவே? எந்த நோக்கத்திற்காக அவை தோற்றுவிக்கப் பட்டனவோ அந்த நோக்கத்திற்காக அவை செயல்படுகின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழின மேம்பாட்டிற்காக நயன்மைக் கட்சி தோன்றிப் பின் அது திராவிடர் கழகமாக மாறிப் பின் தி.மு.க.வாகப் பிரிந்து அதுவும் அ.தி.மு.க.வாகப் பிரிந்துள்ளதே! இது வளர்ச்சியையா காட்டுகின்றது அவை கொண்ட நோக்கங்கள் நிறைவேறினவா? ஏதோ சிறிது வளர்ச்சி தென்பட்டாலும் தமிழின அழிவுதான் நடந்து வருகின்றது. தலைவர்களின் புகழ்க் காய்ச்சல் இன்று எந்த அளவிற்கு தமிழினத்தை அழிவுப் பாதையில் கொண்டு செல்கின்றது. ஆக இத்துணை இயக்கங்கள் இருந்து என்ன பயன்? ஆரியத்தின் ஆணிவேர் இன்னும் ஆழப்பதிந்து தானே உள்ளது. இத்துணை இயக்கங்கள் வளர்ந்தும் ஆரியம் முன்னைவிட வளமையோடும் செழுமையோடும் தானே வளர்கின்றது. பிராமணீயத்தை இந்த இயக்கங்கள் கைக்கொண்டு விட்டு பிராமணர்களை மட்டும் தாக்குவதில் என்ன பயன்? கைவலிக்காமல் கொட்டுதலா? ஆக பல்வேறு இயக்கங்கள் தமிழர்களின் வாழ்வில் வளர்ச்சியை ஏற்படுத்தாது. மாறாக இன்னும் அவர்களின் அடிமைத் தளையை இறுகப் பூட்டுதற்கே பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன, அந்த இயக்கங்களில் தமிழர்களின் உண்மையான நலம் நாடும் தலைவர்கள் இல்லாமலும் இல்லை. அவர்கள் இனியாவது தங்கள் தங்கள் தனிப்பட்ட கருத்து வேற்றுமைகளை மறந்து தமிழினத்தின் ஒட்டு மொத்த நலனைக் கருத்தில் கொண்டு ஓரணியில் ஒரு தலைமையின் கீழ் செயல்பட முன்வருவார்களானால் இந்தத் தமிழினம் ஒருவேளை உய்யலாம்.

இதுகாறும் கூறியவற்றால் தமிழின முன்னேற்றத்திற்கு இன்றுள்ள நிலையில் பல இயக்கங்கள் தேவையில்லை என்றும் தலைமையை மதித்துப் போற்றாத பண்பாட்டு இழிவால்தான் ஒரே நோக்கம் கொண்ட பல இயக்கங்கள் தோன்றி கொண்ட நோக்கத்தைச் சிதற அடிக்கின்றன என்றும், எனவே ஒரு கொள்கைக்காக ஓரே இயக்கம் கொண்டு அதனை வலிவாக்கி இந்தத் தமிழினத்தை முன்னேற்ற எல்லோரும் ஓரணியில் திரளவேண்டும் என்றும் கண்டோம்.

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
உட்பகை யுற்ற குடி- திருக்குறள் அஅஎ.

— மெய். அருள்மொழியன்
தலைவர். உ.த.மு.க. முகவை வட்டம்.

தமிழக அரசு ஏன் அயல்நாட்டுத் தமிழருக்கு உதவ வேண்டும்?

அருணாசலம் புட்பரதம் (மொரீசியசு)

தலைப்பிலுள்ள வினாவைப் படித்தவுடன் பலரிடையே பல்வேறு சிந்தனைகள் தோன்றக் கூடும். விடைகளும் பலவாறாக இருக்கலாம்.

அயல் நாட்டுத் தமிழன் என்ற வகையில் எனது கருத்தை முன் வைக்க விரும்புகிறேன்.

மொரீசியசில் பிரெஞ்சு மொழி

எங்கள் நாட்டை எடுத்துக் கொள்வோம். மொரீசியசில் பிரெஞ்சு மொழி எந்த எந்தத் துறைகளில் எல்லாம் ஊடுருவி உள்ளது என்று பார்த்தால்

1. வைப்பக நடவடிக்கைகள்
2. நிலச் சார்பான விற்றல் - வாங்கல் நடவடிக்கைகள்
3. செய்தித் தொடர்பான யாவையும்
4. வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
5. அறமன்ற (அலுவல்கள்) வாதங்கள்
6. நாடாளுமன்ற அலுவல்கள்
7. வணிகத் தொடர்பான யாவையும்
8. மக்கள் உரையாடல்

என மக்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் எல்லாம் பிரெஞ்சு மொழி பங்கு ஏற்று ஒளிர்கின்றது.

ஆங்கிலம் தான் அரசு மொழி. கல்வித் துறையில் எல்லாப் பாடங்களும் இம் மொழியில் தான் கற்பிக்கப் பெறுகின்றன. ஆனாலும், பிரெஞ்சு மொழியை அகற்றிவிட்டு அதன் இடத்தில் ஆங்கிலம் அமர இனிமேல் முடியாது.

இந்நிலைக்கு யாது காரணம் என்று ஆராய்ந்தால் உண்மை புலப்படும்.

1. ஒரு காலத்தில் பிரான்சு நாட்டின் ஆட்சியின் கீழ் மொரீசியசு இருந்தது. ஆங்கிலேயர் கைப்பற்றிய பின்னரும் பிரெஞ்சே, சாக்கரை ஆலை செல்வராளுமை ஆதரவு பெற்று நிலைத்தது.

2. இருபதாம் நூற்றாண்டின் மிக இன்றியமையாத வளர்ச்சிகளில் ஒன்று, தொடர்பு. அதிலும் செய்தித் தொடர்பு மிக மிக முதன்மையானது. இச் செய்தித் தொடர்புகள் அனைத்தும் பிரெஞ்சு மொழியிலேயே நடைபெற்று வருவது.

இந்த அளவுக்குப் பிரெஞ்சு மொழி மக்களிடையே பரவி விட்டமைக்கு அடிப்படைக் காரணங்கள் எவை என்று பார்த்தால் —

1. மொரீசியசு ஒரு காலத்தில் பிரான்சு நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது உண்மையே. ஆங்கிலேயர் ஆட்சிக்கு (1810) உட்பட்ட பின்னரும் பிரெஞ்சு சாக்கரை ஆலைப் பெருமக்களின் பேராதரவு இருந்ததால் பிரெஞ்சே பல்வேறு துறைகளில் நிலைத்து நின்றது.

2. செய்தித் தொடர்புகள் அனைத்தும் பிரெஞ்சு மொழியிலேயே நடைபெற்று வருவது. (இது மிக்க வலிமை பொருந்திய ஒரு கருவி)

3. பிரான்சு நாடு இந்நாட்டில் பிரெஞ்சு மொழி நிலைத்து நிற்பதற்கென அளித்து வரும் மாபெரும் ஆதரவுகள். அவை:

அ. பிரெஞ்சு மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்கு என ஒரு தனிப்பட்டக் கல்லூரி இயங்கி வருகிறது. ஆசிரியருள் பெரும்பான்மையோர் பிரான்சு நாட்டார் ஆவார்.

ஆ. பிரெஞ்சு மொழியின் வளர்ச்சிக்கு என ஒரு தனி நிறுவனத்தின் மூலம் (Alliance Francaise) உள்நாட்டுப் பள்ளி, கல்லூரி மாணவருக்குரிய ஆண்டுதோறும் நடத்தப் பெறும் கட்டுரைப் போட்டிகள். இவற்றில் தேறியவருக்குப் பெருமதிப்பு வாய்ந்த பரிசுகளை வழங்கி ஊக்குவிப்பது.

இ. பிரெஞ்சு பண்பாட்டின் பல்வேறு கூறுகளை விளக்கும் இலக்கிய, வரலாற்று நூலகம்.

ஈ. பிரெஞ்சு கலைக்குழுக்களை அனுப்புதல் மூலம் அப்பண்பாட்டின் பல்வேறு நுட்பமான கூறுகளை அனைவரும் கண்டு போற்றும்படிச் செய்வது.

உ. பிரெஞ்சு மொழியில் வானொலி செய்திச் சுடர்கள் போட்டியில் பங்குபெற ஊக்குவித்தல். வெற்றி பெற்றோருக்குப் பிரான்சு நாட்டிற்குப் போய்வர வானூர்தி பயணச் சீட்டும், வழிப்பயணத்திற்குக் கைப்பணமும் தருவது.

ஊ. பிரான்சு வானொலி நிகழ்ச்சிகள் சிலவற்றை இந்நாட்டிற்கு எனத் தனியாக அணியம் செய்து உள்நாட்டு வானொலி நிலையத்தில் ஒலிபரப்பச் செய்வது.

எ. பிரெஞ்சு மொழியில் —
ஆக்க அடிப்படையில் ஆராய்ச்சி நிகழ்த்திய அறிஞர்கட்கும் உள்நாட்டில் இம்மொழிக்குத் தலைசிறந்த தொண்டு புரிந்தோருக்கும் பிரான்சு நாடு தனது நன்றியறிதலைத் தெரிவிக்கும் முறையில் அவர்கட்கு மிக உயர்ந்த பட்டங்களைத் தந்து பாராட்டுவது
இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தத் தங்கு தடையற்ற ஆதரவான பெரும் பொருளுதவி தேவை என்பது உண்மை.

வணிக நோக்கம்

ஒரு தனி மாந்தன் ஒரு மொழியைக் கற்பதில் பல நோக்கங்கள் இருக்கலாம். ஆனால், ஒரு நாட்டின் அரசு இன்னொரு நாட்டு மக்கள் தனது மொழியைக் கற்பதற்கென பெரும் பொருளைச் செலவழிப்பதன் உள்நோக்கம் ஒன்றோ பலவோ இருக்க வேண்டும். மேலை நாடுகளின் குடியேற்ற ஆட்சி வரலாற்றை அறிந்தவருக்கு ஓர் உண்மை புலனாகாமல் இருக்காது. அது வணிகத்தில் ஊதியப் பெருக்கத்தையே அடித்தளமாக உடையது. இன்றையவடக்கு — தெற்கு நாடுகளின் பேச்சுகளும், அமெரிக்க டாலரின் உயர்வால் கூட்டுச்சேரா நாடுகள் தாக்கப்படுவதும் போதிய சான்றாகும்.

மேலை நாடுகளின் பொருளடிப்படை உருவாக்கப் பெருக்கினை உண்டாக்கி பொது மக்கள் நுகர்ச்சித் திறத்தினை அதிகரித்து அதன்வழி முதலாளிய வளப்பறிப்பை அடிப்படையாக உடையது.

இச் சிந்தனையின் வழியே பிரெஞ்சு மொழிக்கு எனச் செலவிடப்படும் பொருள் தொகையைக் கண்ணுறும்போது உண்மை தெளிவாகிறது.

இப் பிரெஞ்சு மொழி பொதுமக்களிடையே வேரூன்றிவிடும் போது, இம் மொழியில் வெளிவரும் நாள், கிழமை, மாத, இதழ்கள் பெருமளவில் செலவாகும். தவிரவும், பாடநூல்கள், பொழுதுபோக்கு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், கலைக்களஞ்சியங்கள், அகரமுதலிகள் முதலியவை பெருமளவில் விற்பனையாகின்றன.

ஆகவே, பிரான்சு நாட்டுக்கு அயலகப் பணமாற்று கிடைக்கிறது. அந்நாட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளிகட்குத் தொழிலும் வருமானமும் கிடைக்கின்றது. எழுத்தாளர்கள் ஆயிரக்கணக்கில் பெருகுகின்றனர். வருமானம் பெருக, வாழ்க்கைத் தரம் உயருகிறது.

அண்மைக் காலம்வரை அல்சீரியா, மோரோக்கோ, மோரிடேனியா, வொல்டா, சாட், கமெரூன், கொங்கோ, கபொன், டகோமே, மாலி, செனெகால் ஆகிய நாடுகள் பிரான்சு நாட்டின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தன. இவற்றுள், ஒரு சில நாடுகளைத் தவிர ஏனைய நாடுகளின் ஆட்சி மொழி பிரெஞ்சு மொழியாகவே உள்ளது. இந்நாடுகளைப் 'பிராங்கோபோன்' என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. அதாவது, 'பிரெஞ்சு மொழி வழங்கும் நாடுகள்' என்பது பொருள்.

வணிகத் தந்திரங்களில் ஒன்று. பெருமளவில் முதலீடு செய்து பன்மடங்கு ஊதியம் தேடுவது என்பது ஆகும். பிரெஞ்சு மொழி இவ்வகையில் பெரும் ஊதியத்தைத் தேடித் தருகிறது.

மேலே பிரான்சு நாடு, தனது பிரெஞ்சு மொழிக்கு செய்யும் அனைத்தையும் தமிழர் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் ஒப்பிட்டுக் காண்கையில் இரண்டிற்கும் உள்ள இடைவெளி நன்கு புலப்படும்.

தமிழக அரசு நடுவணரசுக்குக் கீழ்ப்படிந்து ஆட்சி செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. எந்த ஒரு திட்டத்தை வகுத்தாலும் இதனை மறவாமல் இருக்க வேண்டும். ஆகவே, பிரான்சு நாட்டைப் போல தமிழகம் பெரும் பொருட் செலவை மேற்கொள்ள முடியாது. தன் விருப்பம்போல் இயங்க முடியாது.

ஆகவே, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாகக் குறுகிய காலத் நீண்ட கால திட்டங்களை வகுக்க வேண்டும். இத் திட்டத்தைப் பற்றி எனது கட்டுரையில் விரிவுபடுத்தி எழுதியுள்ளேன். இன்னும் சில கருத்துக்களைத் தருகிறேன் :

1. அயல்நாட்டுத் தமிழரிடம் முதன்முதலில் மொழி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.
2. மொழி அறிந்தோரையும், மொழிப்பணி புரிவோரையும் பாராட்ட வேண்டும்.
3. அயல் நாட்டுக் கல்வி நிறுவனங்களில் தமிழ் மொழி வளர்ச்சிக்கென பொருள் முதலீடு செய்து ஊக்குவிக்க வேண்டும்.
4. தமிழரல்லாதார் தமிழ்மொழியைக் கற்பதற்கு அவ்வந் நாடுகளிலேயே வசதிகளை உண்டாக்கித் தர வேண்டும்.

தமிழர் நாட்டில் பொருளியல் வசதியும் செயல் முறைக்குக் கொண்டு வரும் ஆற்றல் உடையோரும் உள்ளனர். ஆகவே, தமிழரால் மேலே தரப்பட்டுள்ள இட்டத்தைச் செயலாக்கும் பேராற்றல் ஏற்கனவே உள்ளது. அரசியல் உறுதுணையைத்தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதனால், தமிழகம், தமிழ் மொழி ஆகியவற்றிற்கும் அனைத்துலகத் தமிழர்க்கும் பெருநன்மை வந்தெய்தும் என்பது உறுதி.

சொல்....
எடுத்துச் செல்!

உ.த.மு.க. உறவு மடல்

மக்கள் உரிமைக் கழகம் ஒரு கருத்துப்போரினை மதுரையில் 15-5-83-இல் தொடக்கி வைத்துள்ளது. சாதி, இனம் பற்றிய ஆய்வுக்கு இத் தொடக்கம் ஒரு தூண்டுகோலாகவுள்ளது.

அன்று, தோழர் குணா கட்டுரை படித்தார்! தமிழில் படித்தார். என்றபோதும் யாரும் புரிந்துகொள்வதாக இல்லையே!" என்று அலுத்துக் கொண்ட சிலர் 'தனித் தமிழ்' முன்னேறத் தடையாக இருப்பதாகக் கூறினர். அதனால், சூடான தருக்கம் ஒரு சிறு வட்டத்தில் பற்றிக் கொண்டது. அதனை ஓரளவு எண்ணிப் பார்க்கின்ற பொறுப்பு ஒன்றுள்ளது.

உலக அளவில் அறிவியல் சொற்களை 'அப்படியே' பிற வளரும் மொழிகள் ஏற்றுக்கொள்கின்றன. நாம் மட்டும் ஏன் அவற்றைத் தமிழ்ப்படுத்த வேண்டும்?

மக்கள் புரியும் வண்ணம் எழுதுதல் வேண்டும். கடினச்சொல் என்று ஒன்றில்லை. காலப்பட்டு அது கையாளக் கையாள மக்கள் வயப்பட்டுவிடும் என்பதில் நம்பிக்கை உறுதி நமக்குள்ளது. என்றபோதும், அறிவியல் சொல்லாக்கங்களை அறிவியல் அறிஞர் ஒப்புக்கொண்டபடி பயன்படுத்த வேண்டும் எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

உலக அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட கணிதம், அறிவியல், அடையாளக் குறியீடுகளையும் சொற்களையும் நாம் ஏற்றுக்கொள்ளவே செய்கின்றோம். ஆயினும், மெய்யியல் கருத்துகளை உருவாக்கம் பண்ணும்போது அறிஞர்களுக்குள் வேறுபாடு காண்பது இயல்பே ஆயினும், கருத்துப்போரில் ஈடுபடுகின்ற நாம் ஒப்புகின்ற அறிந்த சொல்லை மக்களிடம் எடுத்துச் சொல்வோம். அவை மக்களிடையே பயின்றுவரும் போது தக்கவாறு நிலைபெறும். அதுவரை 'ஆக்கங்களை' எடுத்துச் செல்வோம். அவை மக்களிடம் பயின்று புழக்கமாகிவிடும்.

புதிய முயற்சியில் தோல்விகள் ஏற்படும். அவை கற்றுத் தரும் படிப்பினைகள் மூலம் முன்னேற்றம் ஏற்படும்.

ஆய்வுத்துறையில் மக்கள் நோக்கு வளர, விடாது முயல்தல் வேண்டும். ஆய்வாளர்களிடையே உள்ள குறுகிய கண்ணோட்டங்களை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற அரசியல் பார்வை உடைத்து உயர்த்தும் என நம்பலாம்!

அரசியல் தெளிவும் ஆட்சியதிகாரத்தை வலுப்படுத்தும் நடைமுறையும் செயல்படுதல் வேண்டும்!

அறிஞர்கள் கூடி முடிவுசெய்தே புதிய சொல்லைப் புழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பது அறிஞர்கள் மக்களை நோக்கி, வருவதைத் தடுக்கும் செயலாகிவிடும். அறிவியல், அரசியல், மெய்யியல் போன்ற துறைச் சொற்களை உருவாக்குவதும் பரப்புவதும் ஏற்றுக்கொள்வதும் சுழன்று முன்னேறி உயர்ந்து வரும் போக்கிலேயே அமைய முடியும்.

தூயதமிழ் நடை எழுதும் பிடிப்பு, அறிஞரிடையே உள்ள பல்வேறான பித்துகளில் ஒன்றெனக் கொள்ளலாம்.

மக்களிடையே செல்லச் செல்லப் பித்தமும் தெளியும், மொழியமைப்பிலும் தெளிவு தோன்றும். கருமமே கண்ணாயினர்க்குள்ள 'கடுமை' கண்டு, அச்சம் அடைகின்றவரும் உண்டு. 'தனித்தமிழ்' என்னும் துறை மூழ்க விரும்பாதவர், மக்களிடம் செல்லட்டும். அங்கே, தமிழ் கற்பதும் தூய—புதிய—சரியான மொழியறிவு பெறுவதும் நிகழும்!!

தமிழ், தமிழ்த் தேசியச் சிக்கல்கள் தாமாகவே தீர்வதில்லை, அவை, குமுக அரசியல் மாற்றத்தில் தீர்வதாகும். இந்த அடிப்படை உண்மையை அறிவோம்.

நாம் தேசியச் சிக்கலுக்குத் தீர்வு காணத் தடையாகவுள்ள கருத்துகளை எதிர்த்துக் கருத்துப்போர் நிகழ்த்தும்போது, தேசிய வுணர்வைச் சாலூன்றச் செய்யும் மொழியுணர்வு, தமிழியல் அறிவுக்கு ஊக்கம் அளிப்பது தவிர்க்க முடியாததாகும்.

'சொல்... அதை எடுத்து செல்', மக்களின் ஏற்புத்திறன் சரியான சொல்லாக்கத்திற்கு வழிகோலும் என நம்புவோம்!

— பறம்பை அறிவன்.

மலேசிய மண்ணில் 'தமிழ்நிலம்' பெருமணம்!

1929-இல் தன்மான, பகுத்தறிவு அரிமா தந்தை ஈ.வெ.இரா. பெரியார் அவர்கள் மலேயா வருகைக்குப்பின் 'தமிழ்' தென்கிழக்கு ஆசியாவில் நிலைபெற்றது. அவரின் எழிச்சிமிக்க கருத்துகள் 'குடியரசு' இதழ் வழி படர்ந்தது.

இப்பொழுது, உலகம் போற்றும் கையில் 'தமிழ் நிலம்' வருகை 'தமிழன்' இருக்கிறான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. கேட்பாரற்று, ஏதிலியாக உலகம் முழுதும் வாழும் தமிழனுக்குத் 'தொடர்பு இல்லை', அப்பொழுது. இங்கே 'தமிழ்நிலம்' இப்பொழுது 'உறவு' பூண்டுள்ளது. எந்தத் திசையில், என்ன நடந்தாலும் 'தமிழனுக்கு'த் 'தமிழ்நிலம்' இப்பொழுது காவலன்! தோழன்!

வெளிநாட்டுத் தமிழன், இனி ஆங்கில இதழ் வழி, உலகில் உள்ள தமிழ் இனம் பற்றி தெரிந்துக்கொள்ளும் தேவை முற்றுப் பெற்றது.

American Weekly, English Weekly, French Weekly Hindi Weekly எல்லாம பகர்ந்த கருத்துகளை இனி 'Thamizh Nilam Weekly' உலகத் தமிழனுக்கு கருத்துப்பேழை! செய்தி இதழ்!! வாழ்க பாவலரேறு! வெல்க தமிழ் நிலம்!!

அன்பன், இரா. ப. தங்கமணி, (பினாங்கு, மலேசியா)

ஒரு கோடித் தமிழர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர்

இர. ந. (வீரப்பன்) மலேசியா.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன் பிரிட்டிசு, பிரஞ்சு, போர்ச்சுகீசு, டச்சு மற்றும் ஒருசில நாடுகளின் குடியேற்றங்களால் பல இலக்கம் இந்தியர்கள் உலகம் எங்கும் குடியேறினர். இலங்கை உட்பட வெளிநாடுகளில் இன்று வாழ்வோரில் தமிழர் மட்டும் ஒரு கோடிப்பேராவர்.

பல நாடுகளின் புள்ளிவிளக்கம் சரிவரத் தெரியவில்லை 1970-இலிருந்து. மீண்டும் இக்குடியேற்றம் தொடர்ந்து வருகிறது. கழகக் காலம் முதற்கொண்டே இது இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த கால் நூற்றாண்டில் வட அமெரிக்கா, பிரிட்டன், ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் மிகுதியான வேலைவாய்ப்பு தேடிப்போகின்றவர்கள் பலர். இவர்களில் இருவகை. (1) பிரிட்டன், ஒன்றிய அமெரிக்க நாடுகளில் நிலையாகக் குடியேறிவிட்டவர்கள். (2) வருமானம் ஈட்ட, பிழைக்கத்தக்க வேலை தேடிப்போகின்றவர்கள். முன்னவர் குடியுரிமை பெற்றுத் தங்கிவிட்டவர்கள். பின்னவர்போய் குறிப்பிட்ட காலம்வரை தங்கித் திரும்புகிறவர்கள்.

15-7-1980-இல் இந்தியப் புள்ளிவிளக்கப்படி இந்தியாவிலிருந்து வெளிநாடுகளில் வாழ்வோரின் கணக்கு (ஒரு கோடி பத்து இலக்கம்) 1,10,01, 298 பேர். பல இனங்களின் இந்தியர்களான இவர்கள் இந்திய வழிமுறையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 137 நாடுகளில் வாழும் இவர்களில் 60 விழுக்காடு (ஏறத்தாழ 67.60 இலக்கம்) தத்தம் வாழ்நாடுகளின் குடியுரிமையைப் பெற்றுவிட்டனர்.

இதில் இலங்கைத் தமிழர்களின் (வடக்கு-கிழக்கு) எண்ணிக்கை சேரவில்லை. இவர்களின் பழமரபினர் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருக்கோணமலை. 18 ஆம் நூற்றாண்டுக்குமுன் இங்கு வாழும் தனித்தமிழர் மரபினராவர்.

இலங்கையில் (கண்டி-மலைநாடு) 13.50 இலக்கம் இந்தியர் உள்ளனர்; இவர்களில் குடியானவர்களாகி விட்டவர் 4.32 இலக்கம். இவர்களைச் சாராத ஓர் இலக்கம் தமிழர் தமிழர் என அழைக்கப்படும் இவர்கள் வெளிநாடுகளிலும் வாழும் இந்தக் கணக்கும், இந்திய பழமரபுக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

இந்திய பழமரபினரின் புள்ளி விளத்தம் :

வெளி நாடுகளில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை வருமாறு : (அடைப்புக்குள் உள்ளது குடியுரிமை உள்ளவர்கள் தொகை)

1 மலேசியா 12,08,500. (10 09,500)
2 பிரிட்டன் 5 இலக்கம் (பாதிபேர்)
3 மொரிசியசு 623,500 (612,527)
4 வட அமெரிக்கா 3 இலக்கம் (35,000)
5 கனடா 1 75 இலக்கம் (95,000)
6 உருசியா 750 பேர் (2)
7 சீனு 8 பேர்
8 போலந்து 49 பேர்
9 கிழக்கு செர்மனி 100 பேர்
10 யூகோசுலாவியா 50 பேர்.

வட இந்தியர்கள் (குசராத்தி, வங்காளி இந்தி-பிற) மிகுதி; தமிழர் இரண்டாவது எண்ணிக்கை :

11 பிசி 300,697 (00 650)
12 கயானு 424,400 (424,100)
13 கென்யா 79,000 (72 500)
14 சமைக்கா 50 318 (50,000)
15 போர்ச்சுக்கல் 6 000 (5939)
16 நெதர்லாந்து 1.01 லட்சம் (ஓர் இலக்கம்)
17 நியூசிலாந்து 10,000 (9 200)
18 மொசாம்பிக் 22,043 (21,792)
19 ஏமன் 1 லட்சம் (99 500)
20 திரினிடாட் 4.21 லட்சம் (4,2 இலக்கம்)
21 தான்சானியா 59,000 (55,000)
22 சூரிநாம் 124,900 (124,750)
23 ஆபகான் 30,000 (25 000)
24 ஆஸ்திரேலியா 18 599 (15,985)
25 ஒ. அ. குடியரசு 1.52 லட்சம் (2000)
26 சவுதி அரேபியா 1.2 லட்சம் (2000)
27 குவைத்து 65,000 (100)
28 ஈராக் 20,250 (10,000)
29 ஈரான் 20,800 (920)
30 சிங்கப்பூர் 3 லட்சம் (சுமார் 85%)
31 இந்தோனேசியா 35 ஆயிரம் (34 ஆயிரம்)
32 பர்மா 3 லட்சம்
33 அந்தமான் நிக்கோபார் 8522 (1976 கணக்கு)
34 தென்னாப்பிரிக்கா 5 இலக்கம்.
35 ரியூனியன் 2 லட்சம் (தமிழர் மிகுதி)
36 பிரான்சு 30 ஆயிரம்
37 குவாதலூப் 21 ஆயிரம் (21,000)
38 பிரஞ்சு கயானா 6000 (6000)
39 மார்தினிக் 13 ஆயிரம் (13 ஆயிரம்)
40 ஆங்காங் 300

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

தமிழன் கண்ட இசை-ஒருசெய்தி!

சொற்கோ.

ஐயா, தங்களின் 'தமிழ் நிலம்'— நாள் 22-5 83 - இல் வெளியான 'தமிழன் கண்ட இசை' என்ற நூல் மதிப்புரையைக் கண்டேன்.

அதை ஒட்டிக் கீழ்க்காணும் ஒரு விளக்கத்தையும் எழுத விழைகிறேன்.

'திருவிளையாட்ற் புராணத்'தில் விறகு விற்ற படலம் என்றொரு பகுதி வருகிறது. பாண்டிய நாட்டை அடிமை கொள்ள ஏமநாதன் என்ற வடதிசைப் புலவனை, ஈசனே —சொக்கநாதனே— விறகு வெட்டியாக வந்து விரட்டி விட்டதைக் கூறும் செய்யுள் தொகுதியில் கீழ்க்காணும் விளக்கம் சொல்லப்பட்டுள்ளது.

அஃதாவது பாடுவோர் பாடும்பொழுது செய்யக்கூடாத உடற்குற்றங்கள் என்னென்ன என்று கூறப்பட்டுள்ளன.

வயிறு குழிவிழும்படி உள்ளுக்குள்ளே இழுத்துக் கொள்ளக் கூடாது.

அழுமூஞ்சிபோல முகத்தை வைத்துக் கொள்ளக் கூடாது.

வளைந்திருக்கும் புருவம் மேலேறும்படிச் செய்யக்கூடாது.

தலையைக் கண்டபடி அசைத்தலும், கண்களை உருட்டிக் காட்டுவதும் கூடாது.

பற்களைக் காட்டுவதும், மிடறு வீங்கியிருத்தலும் கூடாது.

'வயிறது குழிஇ வாங்க
வழுமுகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல்
சிறுநடுக் குறல்கண் ணாடல்
பயிரரு மிடறு வீங்கல்
பையென வாயங் காத்தல்
எயிறது காட்ட லின்ன
வுடன்றுழிற் றுற்ற மென்ப'

மனோன்மணி—காசி திருமணம்

1-6-83 தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், இளையான்குடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், உ.த.மு.க. 'தமிழ் நிலம்' ஆர்வலரும் தூயதமிழ் அன்பருமான,

திரு. வீ. மலைக்கண்ணன் க.இ. அவர்களின் மகள் செல்வி. மனோன்மணிக்கும் – காசிக்கும் நடந்த திருமணத்திற்குப் பேராசிரியர். க. அன்பழகன் வருகை தந்தார். விழாவிற்கு ஏராளமான மக்கள் வந்து சிறப்பித்தார்கள் வாழ்க தமிழ்க் குடும்பம்!.

— பறம்பை அறிவன்.

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம். வெளியூரிலிருந்து வரும் அன்பர்கள் முன் கூட்டி இசைவு பெற்று வரவும்.

— அமைச்சர்.

தலைமைப் பொறுப்பும் தொண்டுக் கடமையும்!

தந்தை பெரியார்

(ஓர் இயக்கத்தைக் கட்டி நடத்துபவர்களுக்கு உள்ள சுமையையும் பொறுப்பையும் உணர்த்துவதுடன், தொண்டர்களின் தாறுமாறுன நடவடிக்கைகளையும் சுட்டிக் காட்டுகிறது, இக் கட்டுரை. இது, தந்தை பெரியார் அவர்கள் 23-8-1945-ஆம் நாள் திருச்சி நகரப் பேரவையில் தம் கட்சியின் செயற் கூட்டத்தில் பேசிய பேச்சாகும். 25-8-45-இல் 'குடியரசு' இதழில் வெளிவந்த இது, அண்மையில் (4-6-83 இல்) 'விடுதலை'யிலும் வெளியிடப் பெற்றது. உ.த.மு.க. அன்பர்களுக்கும் இக்கருத்து தெரிய வேண்டி, இது 'தமிழ் நில'த்திலும் வெளியிடப் பெறுகிறது. இதிலுள்ள வடசொற்கள் சில தமிழாக மாற்றப்பட்டுள்ளன.)

நான் யாரையும் எந்தச் செயலையும் பொறுப்பேற்றுக் கொண்டவர்களிடம் விட்டு விடுவது வழக்கம். பொறுப்பேற்காமல் அதிகாரம் செய்பவர்களை பொருட்படுத்தாது விட்டு விடுவதும் வழக்கம். நம் இயக்கம் தொண்டாற்றித் தொல்லை ஏற்றுக் கொண்டு துயரப்பட வேண்டிய இயக்கமாகும். இதில் வெறும் அதிகாரக்காரருக்கு இடம் கொடுத்தால் தொண்டாற்றுகிறவர்கள் சலிப்படைந்து விடுவார்கள். ஒரு தலைவன் வேண்டும். அவன் நடத்துபவனுய் இருக்க வேண்டுமேயொழிய நடத்தப்படுவனுய் இருக்கக் கூடாது. அடுத்தாற் போல் பின்பற்றுபவர்கள் இருகக வேண்டும். அவர்கள் தலைவரின் கருத்துக்கு ஒப்புக் கொண்டு (ஒத்து) உழைக்கிறவர்களாக இருக்க வேண்டும். அதற்குத்தான் ஒத்துழைப்பு என்று பெயர். அதிகாரம் செய்து கொண்டு தலைவர்களையே செயல குப்றிபு (Diary) கேட்பவர்களாக இருக்கக் கூடாது. பல பேர் அதிகாரம் செய்தாலும் வினை கெட்டுப் போகும்.

சிலருக்குப் பின்பற்றுவது அவமானமாய் இருக்கலாம்! அப்படிப் பட்டவர்களுக்கு வேறு பல கட்சிகளை அமைத்துக் கொள்ள பல வசதிகளும், வேறு வினைகளும் அப்படிப்பட்ட தொண்டர்களைத் தாங்குவதற்குப் பல தலைவர்களும் இருக்கிறுர்கள்.

ஆனுல் நம் கட்சிகள் அப்படிப்பட்டவையல்ல! பின்பற்றித் தொல்லைப்பட வேண்டியது, சிறைவாழ்வு — குடும்ப இழப்பு. வாழ்வுக்கேடு, கல்லாத பொதுமக்களிடம் அவமதிப்பு, அரசினரிடம் வெறுப்பு முதலியவை அடைய வேண்டிய இக்கட்டான செயல்களின்பாற் பட்டதாகும். இதற்கு அப்படிப்பட்ட செயல்களில் நம்பிக்கையும், அவற்றிற்கு அணியமும் தகுதியும் உள்ளவர்களுக்கே இடம் இருக்க முடியும். இல்லாதவர்கள் வீணுன மன இக்கட்டுகளும் கட்சிப் போக்கைத் தடைப்படுத்தி முட்டுக்கட்டை போடும் வேலையுமே செய்ய வேண்டியிருக்கும்.

இந்த முட்டுக்கட்டைக்காரரிடம் எனக்குப் பேராயக்கட்சியிலிருந்த (congress) காலம் முதற்கொண்டு பட்டறிவு உண்டு. இன்றியமையாத் தேவையில்லாத காலம் வரை தெரியாதவன் போல் இணங்கியிருப்பேன். தேவையேற்பட்டதும் யாரையும் உதறித் தள்ளிவிட்டு, என் வினையை முடித்து வெற்றி காண்பதற்கு முனைந்து விடுவேன். அப்படிச் செய்தால்தான் உண்மையாகப் பாடுபடுவதாகக் கருதிக் கொண்டிருப்பவனுக்கு நிறைவு ஏற்படும்! இது இயற்கை! ஆதலால், 'முழு வல்லாண்மை" என்பதாகக் குறை கூறுதீர்கள். 'மக்கள் நாயகம்' (ஜன நாயகம்) என்பதே புரட்டு ஆட்டமான செயல். நமக்கு அது புரட்டும் முட்டாள் தனமானதுமான செயல்.

நீங்கள் பெரிதும் இந்த இயக்கத்தில் தொண்டாற்றுவதை என்னிடம் நம்பிக்கையுள்ளவரை என் தொண்டிற்கு உதவி செய்ததாய்க் கருதுங்கள். நம்பிக்கையற்றபோது என்னைத் தள்ளிவிடுங்கள். அல்லது என் தலைமையை உதறித் தள்ளிவிட்டுப்போய் ஒருகட்சி அமைத்துக் கொள்ளுங்கள். அந்த வகையாக இருந்தால்தான் தன்னலமற்ற தொண்டு செய்ய முடிகிறது. இதை நான் கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலமாகச் சொல்லி வருகிறேன்.

குடி அரசைப் பாருங்கள். என் பல பேச்சுகளையும் படியுங்கள். மதிப்புறவும் செல்லாண்மையும் (செல்வாக்கும்) ஏற்படுகிறவரை இவற்றைப் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் கூடவேயிருந்து, பெரியார் கூறுவது படி' நடப்பதாக பொய் மெய்யம் (சத்தியம்) செய்வதும் (உறுதி கூறுவதும்) தங்களுக்குத் தனிப்பெருமையும் (செல்வாக்கு) ஏற்பட்டு விட்டதாக நினைத்தவுடன் அல்லது ஏந்தின்மை (அசௌகரியம்) ஏற்பட்டவுடன், "பெரியார் முழு வல்லாண்மையர்" (சர்வாதிகாரர்) என்று கூறுவதும் நேர்மையான செயலாகாது. நமக்கு வேண்டியது, நம் இழிவும் நம் அடிமைத்தன்மையும் நீங்க வேண்டியதேயாகும். இதற்கு என்வழி, தனிவழி. தன் விருப்பு வழியுள்ளவர்கள் தனியாய் தன் விருப்பமாய் நடத்துங்கள். என் மீது சினவாதீர்கள் (கோபப்படாதீர்கள்). முட்டுக்கட்டை போடாதீர்கள். சில தோழர்கள் பேசுவதுபோல்" முட்டாள்களாய் இருக்கும் வரை என் கூட இருந்தாகவும், அறிவுயேற்பட்டவுடன், என்னிடமிருந்து விலகிக் கெட்டிக்காரர்களாகவும் எச்சரிக்கையாளர்களாகவும் ஆகிவிட்டதாகக் கூறிப் பெருமை அடைவது போல், மற்றவர்களும், ஒவ்வொருவரும் முட்டாள்களா அறிவாளிகளா என்று இப்போதே சிந்தித்துத் தொண்டில் இறங்குங்கள். ஏனெனில் எதிர்காலத்திலும் அண்மையிலும் உங்களுக்குப் பெரிய துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழல்கள் வரும். அப்போது மற்றவர்களைப் போல் என்னை 'வல்லதிகாரி' (சர்வாதிகாரி) என்று குற்றம் சாட்டி மற்றவர்களைப் போல் கைவிட்டு ஓடி விடாதீர்; தொல்லை கொடுக்காதீர்கள்.

— (குடி அரசு 25—8—45)

'தமிழ்நிலம்' இதழெண். கக கிட்டியது. காரைக் குடியாரின் காரச்சொல் கண்டு, நெஞ்சில் ஆரப் புகுந்த(து) ஆற்ரெணு வருத்தம்!—யாரைப் பழிக்கிறேம் என்றெண்ணிப் பாக்காது நாங்கள் வழுத்து(ம்) நம்பியைப் பழித்தாரே! மண்!

— க, இராயவேல், சென்னை-21.

யாரைப் பழிக்கின்றேம் என்று எண்ணிப் பார்க்காமல் பழிப்பதா?

(காரைக்குடியார்க்குக் கண்டன மடல்கள்)

தான்திருடி; பிறரை நம்பான்

பேரன்பினிய தமிழினக் காவல! 'பாவலரேறே' தமிழ நிலத்தலைவ! ஊழிபெயரினும் தான் பெயரார்' எனும் குறள மணிக்கேற்ப வாழ்க பல்லாண்டு என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன.

'தமிழ்நிலம்' இதழ் 19 29-5-83 கண்டேன். பக்கம் 4-இல் காரைக்குடியார்? 'கரைத்த மைத்தாளை' வெளியிட்டுள்ளீர்கள். விடை கண்டேன். இதோ 'முல்லைச்சரம்' ஆசிரியர் பொன்னடியான் அவர்கள் வரைந்துள்ள விடை.

வினா: சா. குமாரசாமி -- திருவாரூர்.

பாவலரேறு பெருஞ்சித்திரனுரின் தனித்தமிழ் நடை வரவேற்கத்தக்கதா?

விடை: அதில் உங்களுக்கு என்ன ஐயம்! பிறமொழிச் சொற்களை வேண்டுமென்றே கலந்தெழுதித் தமிழின் தனித் தன்மைச்சிறப்புகளைத் திட்டமிட்டுக் கெடுக்கப் பல வடிவங்களில் புதுமைப் போர்வையில் செயல்படும் தமிழ்ப் பகைவர்கள் நடுவில் அவர் போன்றோர் **தூயதமிழ்ப் பணி** பாராட்டத்தக்கது. வரவேற்கத் தக்கது! வாழ்தத்த தக்கது

[முல்லைச்சரம்—ச்ரம் 17 - மலர் - 10 - மே 3-இல்]

தமிழ்நிலம்'கண்டபின் முல்லைச்சரம் கண்டு மடல் வரைய நேரிட்டது காரைக்குடியார்கள் எவற்றை மனத்தில் எண்ணினரோ? அறியோம். யாரோ கலைத்தால் இவரேன் கலைந்தார்? தக்க விடை தாங்களே அளித்துள்ளீர்கள்! திருந்துவோர் திருந்த திருந்தாதோர் வருந்த. தொடரட்டும் தங்கள் சீரிய செயல். தங்கள் பின் நிற்பவர்களை மூடர் என்றுர். எனக்கோர் பழமொழி நினைவுவருகிறது. 'தான் திருடி பிறரை நம்பான்' 1. 'சட்டியில் உள்ளது அகப்பையில் வரும்' 2 வாழ்க அவரின் தொண்டு! நலமே சூழ்க நற்றமிழ்ப் பணிக்கென

அன்புடன். — க. சிவமணி, அமராபூண்டி.

தாங்கள் எச்சரிக்கையாய் இருக்கவும்!

அணிபெருந்தலைவர்க்கு! வணக்கம். நலமே விரும்புகிறேன். 'தமிழ்நிலம்' — எண்.(19) 9-6-83 அன்று கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி இன்னும் ஓரிரு நாள்களில் உருபாய் அனுப்பிவைப்பேன்.

இதழ் 19-இல் காரைக்குடி அன்பர் மடல் கண்டு மெத்த வருந்தினேன் — அதுபோன்ற இன இரண்டகர்களால் தங்களுக்கு ஏதம் நேரலாம் என ஐயுறுகின்றேன். தாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமாய் வேண்டுகின்றேன். தங்களுடைய தலைமையில்தான் தமிழகம் விடுதலை பெறமுடியும்' என்பதைக் கல்லிற் செதுக்கி வைத்துக் கொள்ள வேண்டியதாகும்.

என்னைப் போன்ற எத்துணையோ உண்மைத் தொண்டர்கள் தங்கள் பின் அணிவகுக்க அணியமாக உள்ளபோது, அந்தக் கசடு உள்ளங்களைப்பற்றிக் கவலை நமக்கெதற்கு? தங்களின் நலமான வாழ்வால்தான் எங்களின் விடிவு உள்ளது என்பதால் தங்களின் நலமே பெரிதென்று எண்ணுகின்றேன், — நம்புகின்றேன். உளந் தளராது என்னைப் போலும் இளைஞர்கட்கு வழி காட்டிட வேண்டுகினறேன்.

— தாரை சிதம்பர பாரதி, உடுமலைப்பேட்டை.

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு 50 நாடுகளின் புள்ளி விளக்கங்களைத் தவிர, 86 நாடுகளில் வாழும் இந்தியர்கள் விளக்கம் தெரியவில்லை. உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் இப்புள்ளி விளக்கங்களைத் திரட்டி வருகிறது. 1985இல் நடைபெறும் இதன் பத்தாண்டுச் சிறப்பு விழாவில் இதன் முழுமை வெளியிடப் பெறும் என நம்புகிறேன்.

இருபதுக்கு மேற்பட்ட பிரஞ்சு (கரிபியன் கடல்) தீவுகள், மற்றும் ஆப்பிரிக்கா தூரக்கிழக்குத் தீவுகள் உட்பட) குடியிருப்புகளின் விளக்கமும் பாரிசில் திரட்டப் பட்டு வருகிறது. உ.த ப.இ கிளைகள் திரட்டி வருகின்றன.

தினமணி (சென்னை, 28-4-83) ஏட்டில் வெளி வந்த புளளி விளக்கக்கணக்கில் இந்திய அரசு வெளியிட்டதையே அடிப்படையாகக் கொண்டதால், இதில் இலங்கைத் தமிழர்களின் 1970, 1980களின் கணக்கு சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்காசியா மற்றும் அரபு நாடுகளுக்குச் செல்வோர் பெரும்பாலும் பொருளீட்டவே செல்லகின்றனர். ருமேனியா, மங்கோலியா, வடகொரியா நாடுகளில் இந்தியர் குடியேறவில்லை. தென் வியட்நாம் இந்தியர்கள் 1975இல் திரும்பி விட்டனர்.

137 நாடுகளில் பாதிக்குமேல் வாழும் இந்தியக் குடிமரபினரும், வேறு பல நாடுகளில் நிலையாகவோ, தற்காலிகமாகவோ, வாழும் இத்தகைய இலங்கைத் தமிழர்களின் புள்ளி விளக்கமும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே தமிழர் ஒரு கோடிப் பேர் வெளிநாடுகளில் உள்ளனர்

(நன்றி. 'தமிழ்நேசன்' 8-6-83)

வசைவுகளை வாழ்த்துகளாக ஏற்றுக் கொள்ளுங்கள்!

உலகம் வாழ் தமிழர்க்கு ஒளி தரும் கதிரவனே! பாவலரேறு ஐயா அவர்களே வணக்கம்!

இந்தத் 'தமிழ் நிலம்' இதழ் எண் கக தொகுதி உக . இல் காரைக்குடி அன்பர் ஒருவர் எழுதியிருந்த மடல் என்னை உண்மையிலேயே உள்ளம் நோக வைத்தது. அது எத்துணை உண்மைத் தமிழ் நெஞ்சங்களைப் புண் படுத்தியிருக்குமோ?

யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல இந்தத் தமிழினம் தன் மீது சேற்றினையும் சகதியினையும் வாரிப் பூசிக் கொள்வது இன்று நேற்றன்று. என்றும் நடந்து வருவது தான். இல்லாவிட்டால் நாம் நம் சொந்த மண்ணில் மாற்றனை நலத்துடனும் வளத்துடனும் வாழ, முழுவுரிமையும் தந்து விட்டு நாம தெருவோர ஒரு தனிக் குக்கல் போல் உழல்வோமா?

இருண்ட கண்டம் எனப் படுகின்ற ஆப்பிரிக்க மாந்தர் கூட உரிமைக்காகப் போராடி உயர்வு காணும் போது உலகினையே ஆண்ட இந்தத் தமிழனுக்கு அடிமைத்தளை என்பது பழகிப்போய் விட்டதா? அல்லது அது ஏதேனும் தனிச்சுவை தருகின்றதா? தன் இனத்தான் மேல் குற்றங் கண்டாலும் மறைத்து அவன் குணத்தைப் பேசுகின்ற வேற்றினத்தான் எங்கே? தன் இனத்தான் மேல் குணம் மலையளவிருந்து குறை கடுகளவிருந்தால் கூட அந்தக் குறையை மட்டும் எடுத்துக் கூறிப் பழிக்கின்ற இந்தத் தமிழினம் எங்கே!

இன்று இந்தத் தமிழினத்திற்குத் தேவை பணம் தான். பண்பாட்டில் நுணிக் கொம்பரில் இருந்த இந்தத் தமிழினத் தோன்றல்கள் இன்று பணத்திற்காக எதுவும் செய்யும்! கோப்பெருஞ் சோழன் - பிசிராந்தையார் நட்பினர்போல் இருப்பினும் பணம் கிடைக்கின்றதா உடனே நட்பு பகையாய் மாறும்; பகையுடன் சேரும்; தன்னையே விற்கும். அந்த அளவிற்குப் பணந்தான் தமிழினத்தை ஆள்கிறது. இல்லாவிட்டால் இந்தத் தமிழினம கடுகத்தனையாவது முன்னேறி இருக்காதா?

ஐயா அவர்கள் ஐம்பதாண்டைக் கடந்து வந்தவர். நடந்து வந்த பாதைகளில் பச்சைப பசேலெனும் புல்வெளிகளும் மலர்ப்படுகைகளும் உறுதியாக இல்லை மாறுகக் கள்ளிகளும் கருவேலன் காடுகளுந் தாம் தங்கட்குப் பாதை அமைத்துக் கொடுத்திருக்கின்றன. மலர் மாலைகளைப் போட்டு மனம் பூக்க வாழ்த்துவோர் ஒன்றிரண்டு பேர்தான். மாறுக வாள்களையும் வேல்களையும் வீசியவர் தாம் பல்லோர். அதைத் தானே தமிழினம் செய்யும். ஆக்க வேலைக்கு ஆள் சேர்ப்பதும் சேர்வதும் தமிழினத்தில் குறைவுதான். தமிழின அழிவு வேலைக்கென்றுல் ஒரே நாளில் ஐம்பதினாயிரம பேர் கூடச் சேர்வர்.

(தொடர்ச்சி 7-ஆம் பக்கம்)

யாரைப் பழிக்கின்றோம்..!

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச் சிறுவன் அறிவுரை சொல்லத் தகுதி யற்றேன் எனினும் உங்கள் மேல் உள்ள அன்பினாலும் இந்த அடிமைத் தமிழர் மேல் உள்ள அக்கரையாலும் உங்கள் தலைமையில் என்றும் மாறு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளமையாலும் கூறுகின்றேன். இத தமிழர்கள் தரும் வசைவுகளை வாழ்த்துகளாக ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் எய்யும் ஈட்டிகளையே எடுத்து எதிரிகளைத் தாக்கும் கருவிகளாகப் பயன் படுத்திக் கொள்ளுங்கள் பாயச்சும் வாள்களையே தோதது வாழ்த்து மடலாக விரிந்து கொள்ளுங்கள். அதுதான் வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம்.

இருபதாம் நூற்றாண்டு முடிவுறுகையில் தமிழினம் அழியலாம் என்ற ஒரு வரலாற்றுண்மை உள்ளது. அதனை அழியவிடாமல் காப்பதற்குத் தங்களால் கடைசி உயிர்க்காற்று உள்ளவரை என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள். எத்தனையோ உயிர்கள் தோன்றுகின்றன, எல்லாமும் நிலைக்கின் றனவா? எல்லார் பெயரும் வரலாற்றில் எழுதப்படுகின் றனவா? அதை எண்ணி உங்கள் வழியில் என்றும் போல் நடவுங்கள். இன்றன்று, நாளையாவது உங்கள் உண்மைத் தொண்டினை இந்தத் தமிழ் உலகம் உணராமல் போகாது.

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படுவார் - திருக்குறள் ௯௮௯.

அன்புத்தம்பி,
— **மெய். அருண்மொழியன்**,
தலைவர் உ.த.மு.க.
முகவை வட்டம்

இதற்காகவா இத்தனை வசவுகளும் இழிவுகளும்!

பேரன்புடையீர்

நலம்; நலமே விளைக. தமிழ்நிலம் விடை 15. (29.5.83) இதழ் நேறறு கிடைக்கப் பெற்றேன். அதில் நான்காம் பக்கத்தில் காரைக்குடி பெயர் குறிப் பிடாத அன்பர் ஒருவரின் மடல் கண்டு துணுக் குற்றேன். இனமானமும், மொழிப்பற்றும் சிறிதேனும் இல்லாத இப்படிப்பட்ட தமிழர்களை முன்னேற்றுவதற் காகத்தான் நீங்கள் அமையப்பெற்ற நல்ல நடுவண் அரசுப் பதவியைத் துறந்து, மனைவி மக்கள் நலம் மறந்து கடந்த 25 ஆண்டுகளாகச் சொல்லொண்ணு துன்பங்களில் சிக்குண்டு, தமிழ் மொழி நலமும் இன நலமும் முதல் நிலையாகக் கொண்டு உழைத்தீர்கள்! எத்தனை பெரியார்கள் தோன்றினாலும் இது போன்ற தமிழ்இன இழிபிறவிகளையும், புல்லுருவிகளையும் கடைத் தேற்றுவது கடினமே என் செய்வது? உங்களின் உயர்ந்த குறிக்கோளைப் புரிந்து கொண்டு உங்களுடன் வர மறுக்கும் மரக்கட்டைகளைப் புறந் தள்ளி உங்கள் வழி நடையைத் தொடர வேண்டியது தான்! மற்ற இனத்தவரில் எந்த நாட்டிலும் இன மானத்தை இழந்தவர்கள் இத்தமிழனத்தைத் தவிர இல்லை; இல்லவே இல்லை. அதனால்தான் இந்த இனம் அடிமைப்பட்டு, அழியும் நிலைக்கு வந்து விட்டது. அவ்வன்பர் கூறுவது போல் பொருள் சேர்க்க விரும்பி யிருந்தால் எந்த அரசியல் கட்சியிலாவது நீங்கள் சாய்ந்திருந்தால் வேண்டுமளவு பொருள் குவித் திருக்கலாமே! அல்லது திரைப் படங்களுக்குப் பாடல்கள், எழுதிப் பணமாகப் பெருக்கி வளமான வாழ்க்கை நடத்தலாமே. பொதுவாழ்வில் இது போன்ற வசவுகளை, குற்றச் சாட்டுக்களை எதிர்பார்க்க வேண்டுவதும் புறந்தள்ளுவதும் ஆன நிகழ்ச்சிகளே இருக்கும்.

நிற்க. தமிழ்நிலம் நான் எதிர்பார்த்த அளவு இன உணர்வு கொளுத்த வில்லை என்பது என் முடிவு. தமிழ்நிலம் இன்னும் விரிவடைய் தமிழ்இன நல உணர்வு கொண்ட அனைவர் கைகளிலும் தவழ வேண்டும். தமிழ்நிலம் அளவு (திராவிடநாடு இதழ் அளவு) குறைக்கப் பெற்றுக் குறைந்தது 12 அல்லது 16 பக்கங்கள் வரை இருக்க வேண்டும். விலையை வேண்டுமானால் எண்பது காசு அல்லது ஓர் உருபா என்று உயர்த்தலாம். இப்பொழுது உள்ள அளவு மடிக்காமல் பாதுகாப்பாக வைக்க ஏந்தாக இல்லை. இன்னும் செய்திகள் நிறைய வரவேண்டும். உலகத்தில் உள்ள தமிழர்களின் நிலை, குறிப்பாக இலங்கையில் இன்றைய நிலையில் தமிழர்கள் படும் இடர்ப்பாடுகள் தமிழகத்தில் உள்ள தமிழர்கள்படும் இடர்ப்பாடுகள் ஆகியன வெளியிடப்படவேண்டும். உ.த.மு.க. தமிழகத்திலும் உலகத்தளவிலும் தமிழர்க ளுக்காகத் தமிழ்இன முன்னேற்றத்திற்காக என்னென்ன பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது, தமிழர்கள் எப் படியெல்லாம் அடிமைப்படுத்தப் படுகிறார்கள், ஏமாற்றப் படுகிறார்கள், வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பன கட்டாயம் இடம் பெற வேண்டும். அப்பொழுதுதான இந்த இனத்திற்கு சிறிதளவு சொரணை வரும். பொருள் இழப்பு ஏற்படாமல் தடுக்க, தங்கு தடையின்றித் தமிழ்நிலம் வெளி வர, தமிழ் இனநலம் புரக்கும் அன்பர்களிடம் நன்கொடை திரட்டலாம். அத்துடன் முடிந்த அளவு அன்பர்கள் முயன்று தரமான விளம் பரங்கள் பெற்று ஓரளவு இழப்பை ஈடு கட்டலாம். இன்னும் சிறப்பாக வெளிவர ஆசிரியர் குழு ஆழ்ந்து எண்ணி செயற்பட வேண்டுகிறேன்.

அன்பன் — **க. பழனியப்பன்**, திருச்சி - 10

'தமிழ்நிலம்' நிலைபெற ஒரு கருத்துரை!

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பாவல ரேறு ஐயா அவர்களுக்கு தலை தாழ்ந்த வணக்கங்கள்.

நம் உ.த.மு.க. வின் கொள்கை ஏடு "தமிழ் நிலம்" பொருள் இழப்பில் நடப்பதையறிந்தேன். இதழ் இழப்பின்றியும், தொய்வின்றியும் நடைபெற முன்பு தென்மொழியில் விட்டிருந்த அறிக்கையின்படி அன்பர் களிடம் பங்குத்தொகை சேர்க்கலாம் என்று நினைக் கிறேன். இதற்குப் போதுமான பங்குத் தொகை சேருமானால் நல்லது. அந்த வகையில் அன்பர்களின் கருத்தை அறியும் தமிழ் நிலத்தில் அறிக்கை யொன்றை வெளியிடுங்கள். உருபா 100 மதிப்புள்ள பங்குகள் இரண்டு அல்லது மூன்று வாங்க அணிய மாக உள்ளேன்.

இன்னொரு வேண்டுகோளையும் தங்களிடம் பணி வுடன் வைக்கிறேன். தமிழ் நாட்டுச் செல்வர்கள், நடிகர்கள் போன்றோரிடம் நம் குழு ஒன்றை அனுப்பி நயமாக அவர்களுக்கு எடுத்துரைத்துப் பொருள் உதவி கேட்கலாம். பகட்டுக்கும் விளம்பரத்திற்கும் ஆட்பட்ட அவர்கள் இத்தகைய தொண்டுக்குத் துணை நிற்பார்களா என்பது ஐயமே. எனினும் முயன்று பார்க்கலாம். ஐயா அவர்கள் இதை யெல்லாம் ஆய்ந்து பாராதிருக்க மாட்டீர்கள், தக்கன செய்யுங்கள்.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்
சீத்தலைச் **சாத்தனார்**,
உ. செல்லூர். உ.த.மு.க. வட்டத்தலைவர்.

"உலகத் தமிழர்கள் ஒன்று சேருவோம்!

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கங்கள் பல. காலம் கனிந்து வருகிறது. நம்பிக்கை இழக்க வேண்டாம். இதற்கு முன்னிருந்த நிலையைவிட இப்போது மாற்றம் நிகழ்ந் துளது. ஆயின் ஏற்பட வேண்டிய மாற்றத்தை எண்ணிப் பார்க்கும் போது மலைப்புத் தோன்றும்.

ஊக்கம் அளித்து முன்னின்று செயல் மறவர்களை அழைத்துச் செல்ல வேண்டிய தளபதியாகிய தாங்கள் சிறிதும் மலைப்படைய வேண்டாம். தமிழினம் தங்களாலேயே மீட்சி அடையப் போகிறது. வருங்காலத் தமிழக இலெனினாகத் திகழ்வீரர்கள், நிகழ் காலத்தில் ஏற்படும் சிறு அவமதிப்புகளைக் கால் தூசாக எண்ணி உதறித் தள்ளி விடுங்கள். தங்கள் மனம் புண்படும்படி பேசுவோரை, எழுதுவோரை சிறிதும் பொருட்படுத்த வேண்டாம. பதர் என்றும் விதையாகாது. காலங்கடந்து நிலைத்து நிற்கும் தங்களின் அரிய பணிக்குமுன் இவையெல்லாம் நீர் மேல் எழுத்தென அழிவது உறுதி.

நண்பர் திரு. மணிமொழியன் அவர்களும் நானும் நன்கொடை அளித்து 'தென்மொழி'யும்; 'தமிழ்ச் சிட்டு'ம் நூலகத்திற்கு வர ஏற்பாடு செய்தோம். இத்திங்கள அவ்விரண்டு இதழ்களும் நூலகத்திற்கு வந்து விட்டன. இதே போல 'தமிழ்நிலம்' கிழமை இதழும் கீரனூர் நூலகத்திற்கு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

சென்னையிலோ, தமிழகத்தின் நடு நகரமான திருச்சியிலோ உ.த.மு.க வட்ட, மாவட்ட பொறுப் பாளர்களின் கூட்டத்தைக் கூட்டி தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நூலகங் களில் வரவழைக்க வேண்டியதன் முகாமையை வலியுறுத்துங்கள். அல்லது இதே கருத்தினை வலி யுறுத்தி விரிவாகவும், விளக்கமாகவும், வட்ட, மாவட்டப் பொறுப்பாளர்கட்கு அறிக்கை வெளி யிடுங்கள்.

உ.த.மு.க. தோழர்கள் முயன்றால் கண்டிப்பாக முடியும். இவ்வாறு செய்தால் இதழ்களை நிறுத்த வேண்டிய நிலை தோன்றாது என்பது என் கருத்து.

தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கும் பொற்காலம் வந்துதான் தீரும். அந்நாளில் பூத்துக் குலுங்கும் பொதுவுடைமை பகுத்தறியும், தனித்தமிழும் செழித் தோங்கும். நன்றி.

அன்புள்ள
செந்தமிழ்வாணன் —
செயலர், கீரனூர், குளத்தூர் வட்ட உ.த.மு.க.
புதுக்கோட்டை (மாவ.)

தலைவன்

— நீ. தங்கவேலன்.

தலைவன் என்போன் யாரென்றால்
தொண்டர் தம்முள் முன்நிற்போன்;
மலையில் தெளிவும் நெடுநோக்கும்
மாண்பும் பெற்றே செயற்படுவோன்!
விலைக்கு வாங்க முடியாத
உயர்ந்த கொள்கை தனையுடையோன்;
நிலையில் பதவி நாடாமல்
நிலைத்த பயனுக்(கு) உழைத்திடுவோன்!

'நடப்பீர்'' எனப்பின் நில்லாமல்
''நடப்போம்'' என்றே முன்செல்வோன்;
''கடமை செய்வீர்'' எனாமல்
''கடமை செய்வோம்'' எனச்செய்வோன்!
மடக்கித் தொண்டர் தமையெல்லாம்
மயங்கிக் கிடக்க வைககாமல்
அடங்கி நிற்க அனைவரையும்
அன்போ(டு) அணைத்தே நன்காள்வோன்!

தன்னைப் போன்றே எல்லோரும்
உருதி யுடையோர் எனக் கொள்வோன்;
துன்பம வரினும் மகிழ்ந்தேற்றுத்
தொண்டுக் கென்றே வாழ்ந்திடுவோன்!
தன்பின் னேதான் தொண்டரெலாம
தொடர்தல் வேண்டும என்னாமல்
நன்றாம் வழியை அவர்காட்டின்
நடந்தே அவரைப் பின்தொடர்வோன்!

தொண்டர் கனவை நனவாக்கத்
துவளா(து) என்றும் முயன்றிடுவோன்;
தொண்டர் தம்மை எந்நாளும்
தோள்மேல் தூக்கித் தாங்கிடுவோன்!
எண்ணம் பேச்சு செயல்களிலே
என்றும் தூய்மை கண்டிடுவோன்;
கொண்ட கொளகை தனக்காகக்
கலங்கா(து) உயிரும் தந்திடுவோன்!

அண்ணாவும் தம்பியும்

''அண்ணா?''

''என்ன தம்பி?''

''பலமொழிபேசும் பல இனமக்கள் வாழும் நாடு தானே இந்தியா?''

''ஆமாம்,''

''பலமொழிபேசுவோர் ஒன்றாக ஒரே நாட்டின ராக இருக்க வேண்டும் என்றால், அவரவர் வாழும் பகுதியில் அவரவர் தாய்மொழியும், ஒருமொழிபேசு வோர் இன்னொரு மொழி பேசுவோருடன் தொடர்பு கொள்வதற்கென்று ஒரு பொதுமொழியும் இருப்பது தானே, அண்ணா, சரி?'

''ஆமாம்.''

''அந்தப் பொதுமொழி எல்லோர்க்கும் பொது வானதாக, உலகம் முழுவதும் பரவியுள்ளதாக இருப்பது மிகவும் சிறந்தது அல்லவா?''

''ஆமாம்,''

''அப்படியிருக்க, ஆங்கிலமொழியைப் பொது மொழியாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளாமல், ஒரு பகுதியினர் பேசும் இந்திமொழியை மற்றமொழியினர் பொதுமொழியாக ஏற்க வேண்டும் என்று சொல்லி, அரசியல் வல்லாண்மையால் அம்மொழியைப் பிற மொழியினர் மீது திணித்து வருவது கொடுமை யல்லவா?"

''ஆமாம்.''

''அந்தக் கொடுமையை எதிர்த்து வீழ்த்தும் ஆற்றல் அற்ற ஏமாளிகளாகத்தானே, அண்ணா, இன்னமும் தமிழர்கள் இருந்து வருகிறார்கள்?"

''எனக்குத் தெரியாது தம்பி''.

சென்னை- திருவொற்றியூரில் உ. த. மு. க. நகரக்கிளைத் தொடக்கவிழாப் பொதுக்கூட்டம்

படிப்படியாக கிளைவிட்டுக் கொண்டிருக்கும் உ.த.மு.கழகம் சென்னை மாநகரிலும் கிளைகளைத் தொடங்கியுள்ளது. அதன் திருவொற்றியூர் நகரக்கிளைத் தொடக்கவிழா கடந்த ஆடவை 26 (கி.பி. 20கச) அன்று மாலை 7 மணியளவில் தொடங்கப் பெற்றது.

அன்று மாலையில் 5 மணியளவில் மழை பொழிந்து விட்டிருந்த பொழுதிலும் உள்ளூர் மக்கள் திரண்டிருந்தனர். சரியாக 7 மணியளவில் தென்மொழி ப. முருகவேள் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் விழா தொடங்கியது. திரு. ஒற்றியூர் உததமன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். திருவொற்றியூர் நகரக்கிளைத் தொடக்கத்திற்குத் தூணாக அமைந்தவரும், வடசென்னை மாவட்ட உ.த.மு.க பொருளாளருமாகிய தென்மொழி துரை தென்னவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். அதன்பின்னர், வடசென்னை மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர் தென்மொழி ப. முருகவேள் இயக்கத்தின் இன்றியமையாமை பற்றிப் பேசினார்கள். அசோக் லேலண்டில் பணிபுரியும் தொழிலாளர்கள், அங்கிருக்கும் மூத்தமிழ்ப் பேரவை உறுப்பினர்கள் சிலர் உரைக்குப் பின், மு. தட்சிணாமூர்த்தி அவர்கள் வாழ்த்துரைப் பாடல் ஒன்றைப் படித்து ஐயாவுக்கு அன்பளிப்பு செய்தார்கள்.

அதன்பின்னர் தி.மு.கழக பொதுக்குழு உறுப்பினரும், சிறந்த பேச்சாளரும் ஆகிய திரு. த.வி. அன்புக் கண்ணன் அவர்கள், பாவலரேறு அவர்களின் சிறப்பான செயல் திட்டத்தை வெகுவாகப் பாராட்டி தி.மு. கழக உறுப்பினர்களோ, தலைவர்களோ அவர் கருத்துகளுக்கு எதிர்ப்பானவர்கள் அல்ல என்று குறிப்பிட்டார். அவர் பேச்சுக்குப்பின் கடுமையாக மழை பொழியத்தொடங்கி விட்டதால் பாவலரேறு ஐயா, சொல்லாய்வறிஞர் ப. அருளி, விழுப்பரையன் மற்றும் பலர் மேடையிலிருந்து இடம் பெயர நேரிட்டது.

அரைமணிநேர மழைக்குப் பின், சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்கள் நீண்டதொரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தமிழ்மொழியே பிற அனைத்து மொழிகளுக்கும் மூலமொழி என்று சில எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினார்கள்.

அவர்க்குப் பின், தென்னார்க்காடு உ.த.மு.க செயலர் விழுப்பரையன் அவர்கள் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார்கள். தேசியம் பேசும் திருட்டுத் தனங்களை வெகுவாகக் கண்டித்தார்.

அதற்குப்பின், உலகத்தமிழின முன்னேற்றக்கழக முதல்வரும், தமிழ்நிலம் சிறப்பாசிரியரும் ஆகிய, ஐயா பாவலரேறு அவர்கள் உ.த.மு.க. கொடியினை ஏற்றி வைத்தும் இலச்சினைப் பலகையைத் திறந்து வைத்துவிட்டும் மிக நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தமிழன் பரந்து பட்டு வாழும் நிலையையும், அவன் மொழிவழி - இனவழி அடிமைப்பட்டுத் திரியும் நிலைகளையும் விளக்கினார்கள். தீண்டாமை சரி எனத் தருக்கமிடும் சங்கராச்சாரியார்தான் நாட்டு மக்களிடையே பிரிவினைக்கருத்தை உண்டாக்குகிறார் என்றும், அவர்தான் பிரிவினைக்காரர், குற்றம் செய்பவர் அவரைப் போய் பெரிய தெய்வம் போல் உருக்காட்டும் நிலை கொடுமையானது, இதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும், மக்கள் பசி, பட்டினி என்று துன்புற்று அலையும் நேரத்தில் 1500 கோடி செலவில் ஆசிய விளையாட்டின் கூத்தைப் பற்றிய உண்மை நிலைகளை மக்களுக்கு விளக்கப்படுத்தினார்கள்.

பிறப்பு என்பது மாந்தனுக்கு மாந்தன் வேறு முறையைக் கொண்டதன்று. எல்லா மாந்தனும் ஒரே முறையில் தான் பிறக்கிறான். ஆனால் ஆரியர்கள் அந்நிலைக்கு முற்றிலும் மாறாக பிராமணன் - பிரமனின் முகத்திலிருந்து பிறந்தவன் என்றும், சத்திரியன் பிரமனின் தோள்களிலிருந்து பிறந்தான் என்றும், வைசியன் பிரமனின் தொடைகளிலிருந்து பிறந்தான் என்றும் திராவிடன் அதாவது சூத்திரன் பிரமனின் பாதங்களிலிருந்து பிறந்தான் என்றும் பகர்ந்து திரவிட இனத்தையே இழிவு படுத்திய நிலைகளையும், அவற்றுக்குச்சாட்டையடி கொடுத்தும் அக்கால் வெளிப்படையாக எடுத்துக் கூற முடியாமல் மறைமுகமாக எடுத்து இயம்பிய ஒரே புரட்சியாளர் திருவள்ளுவர்தான். தம பெயரைக் கூட அவர் குறிப்பிட விரும்பவில்லை. அவர் வெளிப்படையாகப் புரட்சிக் கருத்துகளை எடுத்து இயம்பியிருப்பாராயின் அன்றைக்கே அனைத்தையும் அழித்திருப்பர். என்று பல குறட்பாக்களை ஐயா எடுத்துக் கூறிவிளக்கப்படுத்தினார்கள். ஐயாவின் ஆழமான பேச்சு ஏறத்தாழ மூன்றுமணி நேரம் தொடர்ந்து, இரவு பன்னிரண்டரை அளவில் முடிவடைந்தது.

இறுதியில் திருவொற்றியூர் உ.த.மு.க. தொண்டரின் நன்றியுரையுடன் விழா இனிது முடிவுற்றது.

பாவலரேறு இல்லத் திருமணம்



சித்திரச் செந்தாழை — ஆறிறைவன் திருமணம்

கடந்த ஆடவைத் திங்கள் 2-ஆம் பக்கல் (16-6-83) வியாழக்கிழமை காலை 9 மணியளவில், சென்னை, மயிலாப்பூர், கற்பகம் விடுதியில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார் தாமரை பெருஞ்சித்திரனார்** அவர்களின் மூன்றாம் மகள் செல்வி **சித்திரச் செந்தாழை** (அறி.மு)க்கும், கோவை மாவட்டம், சிங்காரம் பாளையம், காலஞ்சென்ற கணபதி அவர்களின் மகன் பா. அ. **ஆறிறைவன்** என்னும் ஆறுச்சாமிக்கும், இசைப்புலவரும் ஓய்வுபெற்ற இபக்கத் துறைப் பொறியாளர் (Executive Engineer) திரு ப **தண்டபாணி** அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் மிக எளிமையாகவும் அதேபொழுது மிகச் சிறப்பாகவும் நடைபெற்றது. திருமணத் தொடக்கத்தில் பாவலரேறு வரவேற்புரை நிகழ்த்தினார். உயர் திருவாளர்கள் செ. பன்னீர்ச்செல்வம் ('தமிழம்' ஆசிரியர், திருக்குறள் பெருமாள், புலவர். தன்னொளியான், பா. அரசேந்திரன், ப.துரையரசன், விழுப்பரையன் - தமிழ்மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் தமிழூர் ப. அருளி வணி.இ; ச.இ நன்றியுரை வழங்கினார். மாலை 5 மணியளவில் அதே இடத்தில் மணமக்களுக்கு வரவேற்பு அளிக்கப்பெற்றது.

பாடுவாய்! மாங்குயிலே!

எடுப்பு

பாடுவாய் மாங்குயிலே! — இனிதாய்ப்
பாடுவாய் மாங்குயிலே (பாடுவாய்)

தொடுப்பு

நாடியே நின்பாட்டையே என்றும்
நான்கேட்டு மகிழ்ந்திடவே, (பாடுவாய்)
பாவல ரேறெனும் பைந்தமிழ்ப் பாவலர்
பாடிடும் தனித்தமிழ்ப் பாவியம் தன்னையே! (பாடுவாய்)
காவல ராய்த்தமிழ் கண்ணியம் காக்கின்ற
கடமையின் வீரராம் பாவல ரேறு புகழ்! (பாடுவாய்)
மாவளஞ் சேர்ந்தநம் மென்தமிழ்ச் சிறப்பினை,
மாநில மாந்தரும் மதித்து வணங்கிடப் (பாடுவாய்)
நாவளம் எய்திட! நற்கனிச் சாற்றினை
நன்றவர் நல்கினார்! என்றுநீ, புகழ்ந்தே! (பாடுவாய்)

— தாழை. ந. இளவழகன், மணப்பாறை

அப்பொழுது தெரியும் நாம் யாரென்று!

மூடன் :- அண்ணே! இந்தியா என்றால் என்னண்ணே ?

வீரன் :- இந்து மதமும், இந்தி மொழியும் தான்டா, இந்தியா.

மூடன் :- நாமெல்லாம் திராவிடராச்சே! நம் மொழி தமிழாச்சே! நாமெல்லாம் யாரண்ணே?

வீரன் :- ஈழத்தில் தமிழன் நிலை இன்றெப்படியோ அப்படியேதான் இந்தியாவில் நம் நிலையும். அங்கு வெடித்துச் சிதறிக் கொண்டு இருக்கின்ற எரிமலை இங்கும் குமுறிக்கொண்டிருக்கிறது. அது விரைவில் வெடிக்கும். அது போழ்து குமுகாயத்திற்கே நாம யாரென்பது தெரியும்டா! பொறுத்திடடா!

மு. துரை. புதுவை-10

உங்கள் ஊரில் ..... ?

தமிழினத்தை அடி நிலையிலிருந்து விடுவிக்கத் தோன்றிய விடிவெள்ளி உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கிளை உங்கள் ஊரில் தொடங்கப் பெற்றுயிற்றா? இல்லையெனில் அதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்!

இந்நூற்றாண்டிற்குள், தமிழினத்தை ஈடேற்றிவிட வேண்டும் எனத் தமிழர்கள் முழு மூச்சாக ஏன் இறங்கக் கூடாது?

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான, அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

பெறுநர்.
திரு.

நூல - அஞ்சல

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.